வ்யா:— (**நொந்தாராக்காதல் இத்யாதி**) இடைவிடாதே உருவ நலிகிற ப்ரேமவ்யாதி. ப்ரேமவ்யாதிக்குள்ளதொன்றிறே இது. (**மெல்லாவி**) விளக்கின் ப்ரக்ருதியின் மார்த்தவம்போலேயிருக்கும் ஆத்மாவும் என்றிருக்கிறாள். அதாகிறது பகவத்துஃகாநுபவத்தாலே நைந்திருக்கை. (**உள்ளுலர்த்த**) தோற்புரையன்றிக்கே, உள்ளே குருத்துவற்றாக வற்றுவிக்க. (**நந்தாவிளக்கமே**) முடியவும் பெறாதே உருவச்செல்லுகிற விளக்கே ! அநுமாநஸித்தமான நஶ்வரத்வத்தை விஸ்மரித்தாள். (**நீயும்**) லோகத்துக்குக் கண்காட்டியான நீயும். (**அளியத்தாய்**) அருமந்த நீ பரார்த்தமான உடம்பிலே இந்நோவுபடுவதே! (**செந்தாமரை இத்யாதி**) கண்ணாலே குளிரநோக்கி ஸ்மிதபூர்வமாக ஸாந்த்வநம்பண்ணி, அந்த நோக்காலும் அந்த ஸ்மிதத்தாலுமாக என்னை அநந்யார்ஹமாக்கினவனுடைய அழகிய திருத்துழாய் மாலையிலுண்டான ஆசையாலே. 1. ''**आद्वारमनुवव्राज**'' (ஆத்வாரமநுவவ்ராஜ) என்று - மங்களாஶாஸநம் பண்ணின பிராட்டியை, தாம் வருமளவும் தரித்திருக்க, 1. ''**पतिसंमानिता सीता**'' (பதிஸம்மாநிதா ஸீதா) என்கிறபடியே - தோளில் மாலையை இவள் தோளிலேயிட்டுக் குளிரநோக்கி ஸ்மிதம்பண்ணிக் கொண்டாடினாற்போலே. (**ஆசையால் வேவாயே**) ஆசையே நெருப்பாக வேகிறாயே? உடம்பே இந்தநமாக வேகிறாயே ? 2. ''**अग्निनेवाग्निपर्वत:**'' (அக்நிநேவாக்நிபர்வத:) என்னக்கடவதிறே. 9.

ஈ— **அவ:— ஒன்பதாம் பாட்டு. உ அக்கழிக்கு ஒரு கரை காணமாட்டாதே மீண்டு வந்து படுக்கையிலே விழுந்தாள் ; அங்கு எரிகிற விளக்கைக் கண்டாள் ; அது உடம்பில் கைவைக்கவொண்ணாதபடி விரஹஜ்வரம் பற்றி எரியாநின்றது என்று அத்தைப்பார்த்து ''நீயும் நோவுபட்டாயாகாதே ?'' என்கிறாள்.**

அ— ஒன்பதாம் பாட்டு. (நொந்தாரா இத்யாதி) உ கழியைச்சொன்ன அநந்தரம் விளக்கைச் சொல்லுகிறதுக்கு ப்ரஸக்தி ஏதென்ன (அக்கழிக்கு இத்யாதி) (அக்கழிக்கு ஒரு கரைகாண மாட்டாதே இதி) சாடு:. தத்துஃகஸ்ய பாரம் த்ரஷ்டுமஸமர்த்தா ஸதீ இதி த்வநி:.

ஜீ— ஒன்பதாம் பாட்டு. (நொந்தாரா இத்யாதி) உ கழியைச்சொன்ன அநந்தரம் விளக்கைச் சொன்னதுக்கு ப்ரஸக்தி ஏதென்ன (அக்கழிக்கு இத்யாதி) (அக்கழிக்கு ஒரு கரைகாண மாட்டாதே இதி) சாடு:. தத்துஃகஸ்ய பாரம் த்ரஷ்டுமஸமர்த்தா ஸதீ இதி த்வநி:.

ஈ— வ்யா:— (நொந்து இத்யாதி₃) b ''நோவ'' என்று புக்கால், நொந்து தலைக் கட்டக்கடவதன்றிக்கேயிருக்கிற ப்ரேமவ்யாதி₄யானது, b₂ தொட்டார் மேலே தோ₃ஷமாம் படி ம்ருது₃வாயிருக்கிற ஆத்மாவைக் c குறுத்துவற்றாக உலர்த்த. (மெல்லாவி) d ப₄க₃வத்₃கு₃ணாநுப₄வத்தாலே நைந்திருக்கை. e காற்றுப்படப்பொறுதிருக்கை. (f நந்தா விளக்கமே) g ஜ்வாலாபே₄த₃ாநுமானமிருந்து பார்க்கிறுளன்றே. h ஸந்தாநவிச்சே₂த₃

அ— b ''ஆரா'' என்றதுக்குத் தாத்பர்யம் (நோவ என்று புக்கால் நொந்து தலைக்கட்டக் கடவதன்றிக்கே) என்றது. c ''உள்ளுலர்த்த'' என்றதுக்குத் தாத்பர்யம் (குறுத்துவற்றாக உலர்த்த) என்று; குறுத்துவற்றாக-முதல் வற்றும்படியாக. d ஆத்மாவுக்கு மார்த்₃வமேதென்ன (ப₄க₃வத்₃கு₃ணேத்யாதி₃) b₂,e ''தொட்டார் மேலே தோ₃ஷமாம்படி'' என்றத்தை விவரிக்கிறுர் (காற்றுப்பட இத்யாதி₃) f நந்தாவிளக்கு - விச்சே₂த₃மில்லாத விளக்கு என்று ஶப்₃தா₃ர்த்த₂ம். g க்ஷணிகமான தீ₃பத்துக்கு நந்தாமையாவதென்? என்ன (ஜ்வாலாபே₄தே₃தி) ''நந்தா'' என்கிற இதுக்கு முடிந்துபிழைக்கப்பெற்றிலையே என்று தாத்பர்யம். h ஜ்வாலாபே₄த₃ாநுமாநம் பண்ணினுல் அத்தால் வந்ததென்? என்ன; தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறுர் (ஸந்தாந விச்சே₂த₃மின்றிக்கே) என்று; ''(ஸந்தாநவிச்சே₂த₃மின்றிக்கே) இருக்கையாலே (உருவ நோவு படுகிறுயாகாதே) என்கிருள்'' என்று கூட்டுவது. அந்த ஸந்தாநம் ஏகாத்மாதி₄ஷ்டி₂தம் என்று தாத்பர்யம். எப்போதும் ஒக்க இப்படி உனக்கு இற்று இற்று எரிகையே ஸ்வபா₄வமாய்படி விளை வதே! என்றபடி. g ஜ்வாலாபே₄த₃ாநுமானமாவது-1.''மத்₄யமக்ஷணபரம்பராவர்த்திநீ ஜ்வாலா ப்ரதி க்ஷணமுத்பத்திவிநாஶவதீ; குத:? வர்த்யவயவஸம்யோக₃ஜந்யவர்த்யவயவவிநாஶித்வாத்; ப்ரத₂ம சரமக்ஷணஜ்வாலாவத்''என்றது. I,I₂,I₃ ''அளியத்தாய் நீயும்'' இத்யந்வயம் ஶ்ருதி₃ நித₄ாயாஹ-

ஜீ— b ''ஆரா'' என்றதுக்குத் தாத்பர்யம் (நோவ என்று புக்கால் நொந்து தலைக்கட்டக் கடவதன்றிக்கே)என்றது. c''உள்''-(குருத்துவற்றாக)d ஆத்மாவுக்கு மார்த்₃வமேதென்ன (ப₄க₃வத்₃ கு₃ணேத்யாதி₃) b₂,e ''தொட்டார் மேலே தோ₃ஷம்'' இத்யாதி₃யின் விவரணம் (காற்றுப்பட இத்யாதி₃) f நந்தாவிளக்கு - விச்சே₂த₃மில்லாத விளக்கு என்று ஶப்₃த₃ார்த்த₂ம்; நந்துதல் - சிந்துதல். g,h ஜ்வாலாபே₄த₃ாநுமாநத்தாலே நாஶம் ஸித்₃த₄மாயிருக்க, ''நந்தா விளக்கம்'' என்கிறதென்? என்ன (ஜ்வாலாபே₄தே₃த்யாதி₃ வாக்யத்₃வயத்தாலே) h ''(ஸந்தாநவிச்சே₂த₃ மின்றிக்கே) இருக்கையாலே (உருவ நோவுபட்டாயாகாதே) என்கிருள்'' என்று கூட்டுவது; ப்₄ரமித்துச் சொல்லுகிருளென்று கருத்து. ''நந்தா'' என்கிற இதுக்கு - முடிந்துபிழைக்கப் பெற்றிலையே என்று பா₄வம். அந்த ஸந்தாநம் ஏகாத்மாதி₄ஷ்டி₂தமென்று தாத்பர்யம். எப்போதும் ஒக்க உனக்கு இப்படி இற்று இற்று எரிகையே ஸ்வபா₄வமாம்படி விளைவதே! என்றபடி. g ஜ்வாலாபே₄த₃ாநுமாநமாவது-1. ''மத்₄யமக்ஷணபரம்பராவர்த்திநீ ஜ்வாலா ப்ரதிக்ஷணமுத்பத்தி விநாஶவதீ; குத:? வர்த்யவயவஸம்யோக₃ஜந்யவர்த்யவயவவிநாஶித்வாத்; ப்ரத₂மசரமக்ஷண ஜ்வாலாவத்'' என்றது. I,I₂,I₃ ''அளியத்தாய் நீயும்''என்று அந்வயம் திருவுள்ளம்பற்றி அர்த்த₂ம்

ப்ர— g (நொந்தாரா இத்யாதி₃) (நந்தாவிளக்கமே) (ஜ்வாலாபே₄த₃ாநுமாநம்) मध्यक्षणपरम्परावर्तिनी ज्वाला प्रतिक्षणं उत्पत्तिविनाशवती; वर्त्यवयवविनाशित्वात्; प्रथम-चरमक्षणज्वालावत् ॥

ஈ—மின்றிக்கே உருவ நோவுபடுகிறாயாகாதே ? (i நீயும் அளியத்தாய்) i_2 நாட்டுக்குக் i_2 கண்காட்டியான நீ படும்பாடே இது! (j அளியத்தாய்) k அருமந்த நீ. l பரார்த்த₂மான உடம்பிலே உனக்கு நோவு வருவதே!

(செந்தாமரை இத்யாதி₂) m 1. " 'पतिसम्मानिता सीता भर्तारमसितेक्षणा' (பதிஸம்மாநிதா ஸீதா ப₄ர்த்தாரமஸிதேக்ஷணா) என்ற பேறு பெறவேணும்" என்றத்தையோ நீயும் ஆசைப்பட்டது? (செந்தாமரைத் தடங்கண்) முக₂த்தைப் பார்த்துக் குளிர நோக்கினபோதைத் திருக்கண்களில் செவ்வி சொல்லுகிறது. (n செங்கனிவாய்) o இன் சொல் சொல்லுகிறபோதைத் திருவத₄ரத்தில் p பழுப்பைச் சொல்லுகிறது. (எம்பெருமான்

அ—(நாட்டுக்கு) இதி. l_2 விஷயஸம்ஸ்காரகப₃ாஹ்யாலோகஸஹக்ருதசக்ஷுஷ ஏவ வஸ்துக்₃ராஹகத்வம் ஹ்ருதி₃ நித₄ாயோக்தம் (கண்காட்டியான இதி) கண்காட்டியான - பதா₃ர்த்த₂த₃ர்சநஸாத₄நமான கண்ணுக்கு விஷயங்களைக் காட்டுகிற என்றபடி. j.k "அளியத்தாய்" என்ன முழுச் சொல்லாய், (அருமந்த நீ) என்றபடி; அதாவது-எல்லாராலும் க்ருபைபண்ணத்தக்க நீ என்றபடி. j.l "அளியத்தாய்" என்றத்தை "வேவாயே" (67q) என்றத்தோடே கூட்டித் தாத்பர்யம் (பரார்த்த₂மான இத்யாதி₃).

m உத்தரார்த்த₄மாத்ரஸ்ய ப₄ாவமாஹ (பதிஸம்மாநிதேதி) பதிஸம்மாநிதேத்யஸ்ய— ப₄ர்த்ரா விஷ்ணோ: ஸூக்திபி₄: தா₃மப்ரதா₃நேந ச ஸம்மாநம் ப்ராப்தா—இதி ப₄ாவ:. யத்₃வா, "அந்தாமத்தண்டுழாய்" என்றத்தைக் கடாக்ஷித்து (பதிஸம்மாநிதேத்யாதி₃) "ஸம்யக் மாநிதா - ஸம்மாநிதா" என்றாய், "தன் திருக்கழுத்தில் மாலையைச் சாத்தினார்" என்றிறே ஆழ்வான் பணிக்கும்படி; "அஸிதேக்ஷணா — என்கையாலே தானும் ஒரு மாலையிட்டாள் போலே காணும்" என்னும் ஆழ்வான். p பழுப்பு - ரக்திமை. n.o "செங்கனிவாய்" என்றதுக்குத்

ஜீ—(நாட்டுக்கு இத்யாதி₃) l_2 கண்காட்டியான-கண்ணுக்கு விஷயங்களைக்காட்டுகிற. j.k "அளியத்தாய்" என்று முழுச்சொல்லாய், 'அருமந்த நீ' என்றபடி; அதாவது - எல்லாராலும் க்ருபை பண்ணத்தக்க நீ என்றபடி. j.l "அளியத்தாய்" என்றத்தை "வேவாயே" (ப 67q) என்றத்தோடே கூட்டி ப₄ாவம் (பரார்த்த₂மான இத்யாதி₃)

m உத்தரார்த்த₄மாத்ரத்துக்கு ப₄ாவம் (பதிஸம்மாநிதேத்யாதி₃) யத்₃வா, "அந்தாமத் தண்டுழாய்" என்றத்தைக் கடாக்ஷித்து ப₄ாவம் (பதீத்யாதி₃) ஆதல். 1. "ஸம்யங்மாநிதா" என்றாய், தம் திருக்கழுத்தில் மாலையை வாங்கிச் சாத்த, 1. "அஸிதேக்ஷணா" என்கையாலே - அவளும் ஒரு மாலையிட்டாள்போலே காணும்—என்று ஆழ்வான் நிர்வஹித்தானிறே. m அயோத்₄யா காண்டே₃ ஷோட₃ஶே — 1. "பதிஸம்மாநிதா ஸீதா ப₄ர்த்தாரமஸிதேக்ஷணா | ஆத்₃வாரமநுவவ்ராஜ மங்க₃ளாந்யபி₄த₃த்₄யுஷீ ||" p பழுப்பு-சிவப்பு. n.o "செங்கனிவாய்" என்றதுக்கு ப₄ாவம்

ப்ர—m (செந்தாமரை இத்யாதி₃) अयोध्याकाण्डे षोडशे—"ध्रुवमद्यैव मां राजा यौवराज्येऽभिषेक्ष्यति ॥ १९ ॥ हन्त ! शीघ्रमितो गत्वा द्रक्ष्यामि च महीपतिम् । सह त्वं परिवारेण सुखमास्स्व रमस्व च ॥२०॥ पतिसम्मानिता सीता भर्तारमसितेक्षणा । आद्वारमनुवव्राज मङ्गलान्यभिदध्युषी ॥ २१ ॥"

10. வேவாரா வேட்கைநோய் மெல்லாவி யுள்ளுலர்த்த
ஓவாதி ராப்பக லுன்பாலே வீழ்த்தொழிந்தாய்
மாவாய் பிளந்து மருதிடைபோய் மண்ணளந்த
மூவா முதல்வா! இனியெம்மைச் சோரேலே.

ஆ— 10. வ்யா:— (வேவாரா) அதூ₃ஹ்யமான என்னுடைய மெல்லாவி முடிந்தாலும், தவிராதே நின்று வேட்கை நோயானது த₃ஹிக்கும்படி உன்னுடைய கு₃ணசேஷ்டி தங்களாலே என்னை ஓவாதே இராப்பகல் உன்பக்கலிலே விழுந்து கிடக்கும்படி பண்ணினாய்; இனி அடியேனைச் சோரவிடாதொழியவேணும் என்கிறார். 10.

ஒ— அவ:— பத்தாம் பாட்டில் — இப்படி தன்னுடைய அவஸாத₃மெல்லாம் தீரும்படி வந்து ஸம்ஶ்லேஷித்த எம்பெருமானைக்குறித்து, 'இனி ஒருநாளும் என்னை விடாதொழியவேணும்' என்று அவனை அர்த்தி₂க்கிறார்.

வ்யா:— (வேவாரா என்று தொடங்கி) சிலநாள் நலிந்து விடக்கடவதன்றிக்கே, மேன்மேலென மிகவும் நலியக்கடவதான விரஹவ்யஸநம் பூ₄ரமில்லாத ஆத்மாவை மிகவும் நோவுபடுத்த, நிரந்தரமாக உன்னுடைய கு₃ணசேஷ்டிதாதி₃களைக்காட்டி என்னை அகப்படுத்திக் கைவிட்டாய். (மாவாய் பிளந்து என்று மேலுக்கு) கேஶியை நிரஸித்து, யமளார்ஜுநங்களின் நடுவே போய், திருவுலகளந்தருளி மஹாபூ₃லியால் வந்த ஆபத்தை இந்த்₃ரனுக்குப் போக்கியருளி, ஒன்றுஞ்செய்யாதாரைப்போலே மீளவும் ஜக₃த்₃ரக்ஷணத்திலே ஒருப்படுமாபோலே, என்னுடைய ப்ரதிப₃ந்த₄கத்தைப்போக்கி இம்மஹாவஸாத₃த்திலே வந்து ஸம்ஶ்லேஷித்து என்னை உண்டாக்கினவனே! 10.

ஈ—இத்யாதி₃) "நோக்காலும் ஸ்மிதத்தாலும் என்னை அநந்யார்ஹையாக்கினவனுடைய அழகிய திருத்துழாய்மாலை பெறவேணும்" என்னும் ஆசையாலே. (q வேவாயே) r உக்கக்காலுக்கு s உளையக்கடவ உன்னுடம்பே நெருப்பாக வேகிறாயாகாதே! 9.

அ—தாத்பர்யம் (இன்சொல் இத்யாதி₃) q,r"வேவாயே" என்றதுக்குத் தாத்பர்யம் (உக்கக்கால் இத்யாதி₃) உக்கக்கால் - விசிறிக்காற்று. "நந்தாவிளக்கமே! அளியத்தாயான நீயும், செந்தாமரை என்று தொடங்கி, ஆசையால் - நொந்தாராக் காதல்நோய் மெல்லாவி உள்ளுலர்த்த - வேவாயே" இத்யந்வய:. உலர்ந்திறே வேவது. "நந்தாவிளக்கமே! அளியத்தாய் நீயும், நொந்தாராக் காதல்நோய் மெல்லாவி உள்ளுலர்த்த, செந்தாமரைத்தடங்கண்" என்று தொடங்கி, க்ரமேண உரையந்வயம்.

ஜீ—(இன்சொல் இத்யாதி₃) q,r"வேவாய்" என்றதுக்கு பூ₄ர்வம் (உக்கம் இத்யாதி₃) உக்கம் - விசிறி; கால் - காற்று. s உளைகை - குன்றுகை. "நந்தாவிளக்கமே, அளியத்தாயான நீயும், செந்தாமரை இத்யாரப்₄ய, ஆசையால் நொந்தாராக் காதல்நோய் மெல்லாவி உள்ளுலர்த்த-வேவாயே" இத்யந்வய:. உலர்ந்திறே வேவது. 9.

ப— 10. அவ:— அநந்தரம், இவ்வார்த்தியைக்கண்டு ஸங்கிஹிதனான ஸா காரணபூதனாயுள்ள ஈஶ்வரனை, 'நீ என்னை நழுவாதொழியவேணும்' என்று அபேக்ஷிக்கிறார்.

வேவாரா—வேவித்து த்ருப்தமாகாத, வேட்கை—ஆசையாகிற, நோய்—நோயானது, மெல்—(விரஹத்தாலே) பலஹீநமான, ஆவி—ஆத்மாவை, உள்—குறுத்துவற்றுக, உலர்த்த—வற்றுவிக்க, இராப்பகல்—இராப்பகல், ஓவாது—இடைவிடாதே, உன்பாலே—உன் ஸ்வபாவங்களிலே, வீழ்த்தொழிந்தாய்—தாழ்ந்து அகப்படும்படி பண்ணினவனாய், மா—(உன்னைக் கிட்டுவார்க்கு விரோதியான கேஶியாகிற) குதிரையின், வாய்—வாயை, பிளந்து—பிளந்து, மருது—(த்வந்த்வமான) மருது (முறியும்படி), இடை—நடுவே, போய்—போய், (அநங்யார்ஹமாம்படி) மண்—பூமியை, அளந்த—அளந்துகொண்டு, மூவா—அத்தாலே இளகிப் பதித்த, முதல்வா—ஸர்வகாரணபூதனே! இனி—இனி ஒரு காலமும், எம்மை—எங்களை, சோரேல்—நழுவவிடாதொழியவேணும்.

''மூவா முதல்வா'' என்றது - நித்யயௌவந ஸ்வபாவனான உத்பாதகன் என்றுமாம். இத்தால் — தம்முடைய அநிஷ்டங்களைப்போக்கி ஸத்தையை உண்டாக்கினபடியை அநுஸந்தித்தாராயிற்று. இதில் ஏகாரம் தேற்றம். 10.

இ— அவ:— பத்தாம் பாட்டில் — அவன் இவ்வவஸாதமெல்லாம் தீரும்படி வந்து முகங்காட்ட, 'இனி ஒருநாளும் என்னைவிடாதொழியவேணும்' என்கிறார்.

வ்யா:— (வேவாரா வேட்கைநோய்) ஒருகால் வெந்து சமையக்கடவ தன்றிக்கே, 1. ''अग्निनेवाग्निपर्वतः'' (அக்நிநேவாக்நிபர்வத:) என்கிறபடியே வெந்தவிடமே இந்தநமாக தஹியாநிற்கிற காதல். அள்வில்லாத வேட்கைநோய். (மெல்லாவி) பாத்தம்போராத ஆத்மாவை. அதாஹ்யமாயிருப்பது கேவலாக்நியாகிலிறே. (உள்ளுலர்த்த) 2. ''गूढोऽग्निरिव पादपम्'' (கூடோऽக்நிரிவ பாதபம்) கோடரத்தில் பற்றின அக்நிபோலே குருத்துவற்றுக வற்றுவிக்க. (ஓவாது இராப்பகல் உன்பாலே வீழ்த்தொழிந்தாய்) வேவாரா வேட்கைநோயாகைக்கு அடியிருக்கிறபடி. இடைவிடாதே ஸர்வகாலமும் உன் குணங்களைக்காட்டி என்னை உன்பக்கலிலே விழவிட்டு, நீ கடக்க நின்றாய். விழவிட்டுக்கொண்டாய் என்னவுமாம். (மாவாய் இத்யாதி) கேஶியை நிரஸித்து, யமளார்ஜுநங்கள் நடுவேபோய் அவ்வாபத்தைத் தப்பி, மஹாபலியால் வந்த ஆபத்தை இந்த்ரனுக்குப் போக்கி, ஒன்றுஞ்செய்யாதாரைப்போலே ஸ்ருஷ்ட்யாதிஜகத்ரக்ஷணங்களைப் பண்ணினவனே! மூவாதொழிகையாவது - இளகிவருகை. அதாகிறது - ஒன்றுஞ்செய்யாதானாய், ரக்ஷணத்தே ஒருப்படுகை. இத்தால் சொல்லிற்றாயிற்று— அப்படியே என்னுடைய விரோதிகளைப் போக்கி, இம்மஹாவஸாதத்திலே வந்து

இ— ஸம்ஶ்லேஷித்து என்னை உண்டாக்கினவனே! என்கிறார். (இனி எம்மைச் சோரேலே) இதுக்கு முன் நீ போய்நின்று பட்டது போரும். இனி என்னை விடா தொழியவேணும் என்கிறார்.

ஈ— அவ:— பத்தாம் பாட்டு. a இவளவஸாத3மெல்லாம் தீர b வந்து ஸம்ஶ்லேஷித்த எம்பெருமானைக்குறித்து 'இனி ஒருநாளும் என்னை விடாதொழியவேணும்' என்கிறார்.

வ்யா:— (வேவாரா வேட்கைநோய்) c "வேவ" என்று தொடங்கினால், ஒரு கால் வெந்து d தலைக்கட்டமாட்டாதாயிற்று. e அல்லாதவை போலன்றிக்கே, ப்ரேம வ்யாதி4க்குள்ளதொன்றாயிற்று f இதுதான். (மெல்லாவி) g ஶரீரத்திலுண்டான ஸௌகுமார்யம் ஆத்மாவிலும் உண்டாயிருக்கிறதாயிற்று இவர்க்கு. (உள்ளுலர்த்த)

அ— பத்தாம் பாட்டு. (வேவாரா இத்யாதி3) a "இனி எம்மைச் சோரேலே" என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை (இவளவஸாத3ம் இத்யாதி3) b "இனி எம்மைச் சோரேல்" என்ற பத3த்3ருஷ்டியாலே (வந்து ஸம்ஶ்லேஷித்த இத்யாதி3)

c (வேவ என்று தொடங்கினால்) என்றது - வேவிக்க என்று தொடங்கினால் என்றபடி: ஹிம்ஸிக்க என்று தொடங்கினால் என்றபடி. d (தலைக்கட்டமாட்டாது) என்றது - தலைக்கட்டப் போகாது என்றபடி. e லோகத்தில், வேவப்புக்கால் வெந்து தலைக்கட்டமாட்டாமையில்லையோ? என்ன (அல்லாதவை போலன்றிக்கே இத்யாதி3) அல்லாதவை ஶரீராந்தமாகையாலே முடியும்; இது ஆத்மாந்தமாகையாலே முடியாதிறே. f (இதுதான்) என்றது - வெந்து தலைக்கட்டாமை என்றபடி. g மென்மை ஶரீரத்துக்கன்றோ உள்ளதென்ன (ஶரீரத்திலுண்டான இத்யாதி3) அதாவது - ப்ரேமவ்யாதி4க்கு து3ஸ்ஸஹமாமிடத்தில் பாத்தம் போராத மென்மை இவளது என்றபடி. இது இருபத்து நாலாயிரத்திலே ஸ்பு2டம். ஆத்மநோ மார்த்த3வம் ப4க3வத்3விஷயப்ராவண்ய ப்ரயுக்தம். h புறம்புலர்த்தியன்றோ உள்ளுலர்த்தவேணும்; முதலிலே "உள்ளுலர்த்த" என்பானென்? என்ன (கூ3டே4ாச்3தி: இத்யாதி3) 1. "அச்சே2த்3யோऽயம்" என்று நிற்க, "உள்ளுலர்த்த" என்பானென்? என்ன (அது3ஸ்ஸஹமாய் இத்யாதி3)

ஜீ— பத்தாம் பாட்டு. (வேவாரா இத்யாதி3) a "இனி எம்மைச் சோரேலே" என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை (இவளவஸாத3ம் இத்யாதி3)

c (வேவ என்று தொடங்கினால்) த3ஹிக்க என்று தொடங்கினால் என்றபடி. e லோகத்தில் த3ஹித்துத் தலைக்கட்டவில்லையோ? என்ன (அல்லாதவை இத்யாதி3) அல்லாதவை ஶரீராந்தமாகையாலே முடியும்; இது ஆத்மாந்தமாகையாலே முடியாது என்றபடி. f இதுதான் - வெந்து தலைக்கட்டாமைதான். g மென்மை ஶரீரத்துக்கன்றோ உள்ளதென்ன (ஶரீரத்திலுண்டான இத்யாதி3 அதாவது - ப்ரேமவ்யாதி4க்கு து3ஸ்ஸஹமாமிடத்தில் பாத்தம் போராத மார்த்த3வம் இவளது என்றபடி; இது இருபத்து நாலாயிரத்திலே வ்யக்தம். ஆத்மாவுக்கு மார்த்த3வம் ப4க3வத்ப்ராவண்ய ப்ரயுக்தம். h புறம்புலர்த்தியன்றோ உள்ளுலர்த்தவேணும்; முதலிலே "உள்ளுலர்த்த" என்பானென்? என்ன (கூ3டே4ாக்3தி: இத்யாதி3) அயோத்4யா காண்டே3 ஶ்ருங்கி3பே3ரபுரே ப4ரத: — 2. "ராமசிந்தாமயஶ்ஶோகோ ப4ரதஸ்ய மஹாத்மந:"

ஈ—h1. "गूढोऽग्निरिव पादपम्" (கூ₃டோ₄க்₃நிரிவ பாத₃பம்) என்கிறபடியே, உள்ளே பிடித்துப் புறம்பே வர வேவாநின்றதாயிற்று. i அதா₃ஹ்யமாயிருப்பது கேவலாக்₃நியாகிலிறே. j 2. "महता ज्वलता नित्यमग्निनेवाग्निपर्वतः" (மஹதா ஜ்வலதா நித்யமக்₃நிநேவாக்₃நி பர்வத:) என்று k வெந்தவிடமே விறகாக வேவாநின்றது.

அ-j "வேவாரா" என்றதுக்கு ப்ரமாணம் (மஹதேத்யாதி₃) 2 "தாநி த்₃ருஷ்ட்வா மஹார்ஹாணி தர்₃ஶயித்வா முஹுர்முஹு:। ராக₄வஸ் ஸஹ ஸௌமித்ரி: ஸுக்₃ரீவே ஸந்ந்யவேஶயத்॥ ஸ தவாத₃ர்ஶநாதா₃ர்யே ராக₄வ: பரிதப்யதே। மஹதா ஜ்வலதா நித்யமக்₃நிநேவாக்₃நிபர்வத:॥" பிராட்டியை ராவணன் அபஹரித்துக்கொண்டு போகிறபோது, பிராட்டி தம்முடைய திரு வாப₄ரணத்தை வாங்கி உத்தரீயத்திலே முடிந்து மஹாராஜர் ஸந்நிதி₄யிலே பொகட்டெழுந்தருள, அத்தையெடுத்துவைத்துப் பெருமாளை ஸேவித்தபோது மஹாராஜர் ஸமர்ப்பிக்க, பெருமாளும் அத்தைப் பலகாலும் பார்த்து மீளவும் மஹாராஜர் வஶத்திலே வைத்தருளி மிகவும் க்லேஶித்தார் என்கிறுன்—(மஹார்ஹாணி) மஹார்க₄ங்களென்றதன்று, விலையில்லாமை யாலே; பின்னை என்சொல்லுகிறது? என்னில்; அவளுடம்புக்கு அர்ஹம் என்கிறது. (தர்₃ஶயித்வா) "இது க்₃ரைவேயகம்; இது அங்கு₃ளீயகம்; இது ராஜா பரிசர்யாபரிதுஷ்டராய் பாரிதோஷிகமாகக் கொடுத்தது; இது கௌஸல்யையுடைய பாரிதோஷிகம்; இது கைகேயினுடைய; இது ஸுமித்ரையுடைய; இது த்₃யூதத்திலே என்னை வென்று வாங்கிக்கொண்டது" என்றுப் போலே. (முஹுர்முஹு:) காண்கையும் காட்டுகையுமே காலக்ஷேபம். (ராக₄வஸ் ஸஹ ஸௌமித்ரி:) "இதுவே பொழுதுபோக்காயிருக்கை ரகு₄குலத்துக்குப் பழியன்றோ; கார்ய சிந்தை பண்ணவேண்டாவோ?" என்று இளையபெருமாள், "எங்களாச்சி 3. 'ராமே ப்ரமாத₃ம் மாகார்ஷீ:' என்ற உபதே₃ஶத்துக்கு இதுவும் பொருளிறே" என்று நினைத்து நிர்ப₃ந்தி₄க்க—(ஸுக்₃ரீவே) ஸஹ்ருத₃யரானவர் பக்கலிலே. (ஸந்ந்யவேஶயத்) அவன் வைத்தபடியே வைத்தார். k "மஹேந்த்₃ராதி₃வத் 'அக்₃நிபர்வத:' இதி கஶ்சித்பர்வதவிஶேஷோऽஸ்தி" இத்யுடா₃லி:

ஜீ—இத்யாதி₃—1. "அந்தர்தா₃ஹேந த₃ஹநஸ்ஸந்தாபயதி ராக₄வம்। வநதா₃ஹாபி₄ஸந்தப்தம் கூ₃டோ₄ऽக்₃நிரிவ பாத₃பம்॥" i 3. "அதா₃ஹ்யோऽயம்" என்னுநிற்க இது கூடுமோ? என்ன (அதா₃ஹ்யமாய் இத்யாதி₃) j "வேவாரா" என்றதுக்கு ப்ரமாணம் (மஹதா இத்யாதி₃) ஸுந்த₃ர காண்டே₃ பஞ்சத்ரிம்ஶே ஸீதாம் ப்ரதி மாருதி:—2. "ஸ தவாத₃ர்ஶநாதா₃ர்யே! ராக₄வ: பரிதப்யதே। மஹதா ஜ்வலதா நித்யமக்₃நிநேவாக்₃நிபர்வத:॥" k "ஹிமவத்பர்வதம் என்றுப்போலே, 'அக்₃நிபர்வதம்' என்றொரு பர்வதமுண்டு" என்ற உடா₃லியை வ்யாவர்த்தித்து "அக்₃நிமய:

ப்ர—h 1. (வேவாரா இத்யாதி₃) (ஆவியுள்ளுலர்த்த) तत्रोपरि (८५) शृङ्गिवेरपुरे भरतः—"रामचिन्तामयश्शोको भरतस्य महात्मनः। उपस्थितो ह्यनर्हस्य धर्मप्रेक्षस्य तादृशः॥ १६॥ अन्तर्दाहेन दहनस्सन्तापयति राघवम्। वनदाहाभिसन्तप्तं गूढोऽग्निरिव पादपम्॥ १७॥"

j 2. सुन्दरकाण्डे पञ्चत्रिंशे—"तानि दृष्ट्वा महार्हाणि दर्शयित्वा मुहुर्मुहुः। राघवस्सह सौमित्रिः सुग्रीवे सन्न्यवेशयत्॥ ४३॥ स तवादर्शनादार्ये राघवः परितप्यते। महता ज्वलता नित्यमग्निनेवाग्निपर्वतः॥ ४४॥"

ஈ— (ஓவாது இராப்பகல்) 1 வேவாரா வேட்கைநோய்போலே இராப்பகல் ஓவாதொழி கிறபடி. (உன்பாலே வீழ்த்தொழிந்தாய்) அகப்பட்டார்க்கு மீளவொண்ணாத உன் பக்கலிலே m விழவிட்டுக்கொண்டாய் என்னுதல்; உன்பாலே வீழ்த்து-n உன் பக்கலிலே விழவிட்டுக்கொண்டு, ஒழிந்தாய் - முகங்காட்டாதே கடக்கநின்றாய் என்னுதல்.

அ-உவாச; தத் பரித்யஜ்ய ''அக்$_{3}$நிமய:பர்வத:'' இத்யபூ$_{4}$தோபமா விவக்ஷிதேத்யபி$_{4}$ப்ராயேணாஹ (வெந்தவிடமே விறகாக இதி).

1 (வேவாரா இதி) விரஹக்லேஶாதிஶயாத் காலஶ்ச தீ$_{3}$ர்க்கோ$_{4}$ ப$_{4}$வதீத்யர்த்த$_{2}$:. ப்ரேம வ்யாதி$_{4}$ அவிச்சி$_{2}$ந்நமாக நலிகிறுப்போலே, இராவும் பகலும் அவிச்சி$_{2}$ந்நமாக நலிகிறதென்றிறே- (வேவாரா வேட்கைநோய்போலே) என்கிற வாக்யத்துக்கு ஶப்$_{3}$தா$_{3}$ர்த்த$_{2}$ம்; இது ''ஓவாது இராப்பகல் உன்பாலே வீழ்த்தொழிந்தாய்'' என்கிற மூலத்துக்கு அநுகு$_{3}$ணமாக யோஜிக்கப் போகாமையாலே, (வேவாரா வேட்கைநோய்போலே) இத்யாதி$_{3}$ வாக்யம் கிஞ்சித் ஸந்தி$_{3}$க்$_{3}$த$_{4}$ம். ''(வேவாரா வேட்கைநோய்போலே) என்ற வாக்யத்துக்கு - அவிச்சி$_{2}$ந்நமாக நோய் வேவிக்கிறுப் போலே, என்னை இராப்பகல் ஓவாதே உன்பக்கலிலே விழவிட்டுக்கொண்டாய்-என்று பொருள்; உரை யிலே, 'இராப்பகல் இடைவிடாதே உன் ஸ்வப$_{4}$ாவங்களிலே தாழ்ந்து அகப்படும்படி பண்ணினாய்' என்றிருக்கையாலே'' என்று இப்படி மூலாநுகு$_{3}$ணமாக யோஜிக்கில் ஸந்தே$_{3}$ஹம் பரிஹரிக்க லாம். m (விழவிட்டுக்கொண்டாய்) ''வீழ்த்தொழிந்தாய்'' என்று முழுச்சொல் என்றபடி. n பத$_{3}$த்$_{3}$வயமாக வ்யாக்$_{2}$யாநம் பண்ணுகிறார் (உன் பக்கலிலே இத்யாதி$_{3}$) இப்பக்ஷத்திலே, வீழ்த்து ஒழிந்தாய் என்றபடி. o$_{2}$ பிளந்து கிழித்து. p எல்லை-ஸீமை. q (ஒன்றும் செய்யாதானாய்க் குறைப்பட்டு) ∙ மூவாவின் தாத்பர்யம். மூவா-முடியாத. r,s ''முதல்வா'' இத்யஸ்ய ரக்ஷகத்வ விவக்ஷயா ஸ்ரஷ்ட்ருத்வவிவக்ஷயா ச ப$_{4}$ாவத்$_{3}$வயம்; r ப்ரத$_{2}$மமாஹ (இவற்றினுடைய ரக்ஷணத் திலே இதி) s த்$_{3}$விதீயமாஹ (இப்படி இத்யாதி$_{3}$).

ஜீ—பர்வத:'' என்று அபூ$_{4}$தோபமா விவக்ஷிதேத்யபி$_{4}$ப்ராயேணாஹ (வெந்தவிடமே இத்யாதி$_{3}$) அதாவது - அக்$_{3}$நிபர்வதம் அக்$_{3}$நியினாலே வேமாபோலே என்றபடி.

1 (வேவாரா வேட்கைநோய்போலே இராப்பகல் ஓவாதொழிகிறபடி இதி) விரஹக்லே ஶாதிஶயாத் காலஶ்ச தீ$_{3}$ர்க்கோ$_{4}$ ப$_{4}$வதி இத்யர்த்த$_{2}$:. ப்ரேமவ்யாதி$_{4}$ அவிச்சி$_{2}$ந்நமாக நலிகிறுப் போலே, இராவும் பகலும் அவிச்சி$_{2}$ந்நமாக நலிகிறது என்றிறே (வேவாராவேட்கை நோய் போலே) இத்யாதி$_{3}$ வாக்யத்துக்கு அர்த்த$_{2}$ம்; இது ''ஓவாதிராப்பகல் உன்பாலே வீழ்த்தொழிந் தாய்'' என்ற மூலத்துக்கு அநுகு$_{3}$ணமாக யோஜிக்கப்போகாமையாலே, (வேவாரா வேட்கை நோய்போலே) இத்யாதி$_{3}$ வாக்யம் கிஞ்சித் ஸந்தி$_{3}$க்$_{3}$த$_{4}$ம்; ''(வேவாராவேட்கை நோய்போலே) என்ற வாக்யத்துக்கு-அவிச்சி$_{2}$ந்நமாக நோய் வேவிக்கிறுப்போலே, என்னை இராப்பகல் ஓவாதே உன்பக்கல் விழவிட்டுக்கொண்டாய்-என்று பொருள்; உரையிலே, 'இராப்பகல் இடைவிடாதே உன் ஸ்வப$_{4}$ாவங்களிலே தாழ்ந்து அகப்படும்படி பண்ணினாய்' என்றிருக்கையாலே'' என்று இப்படி மூலாநுகு$_{3}$ணமாக யோஜிக்கில் ஸந்தே$_{3}$ஹம் பரிஹரிக்கலாம். m முந்தின அர்த்த$_{2}$த்திலே. ''வீழ்த்தொழிந்தாய்'' என்று முழுச்சொல்லு. n த்$_{3}$விதீயார்த்த$_{2}$த்தில் பி$_{4}$ந்நபத$_{3}$ம். q (ஒன்றும் செய்யாதானாய்க் குறைப்பட்டு) என்றது-* மூவாவின் தாத்பர்யம். (மூவா) முடியாத; சேம்பாத என்னுதல்; மூவுதல்-நசித்தல், மூவாமை-நசியாமை; நித்யம் என்றபடியாதல். r ''முதல்வா'' என்றதுக்கு ரக்ஷகனாக அர்த்த$_{2}$ம் (இவற்றினுடைய ரக்ஷணத்திலே இத்யாதி$_{3}$) s ஸ்ரஷ்டாவாக அர்த்தா$_{2}$ந்தரம் (இப்படி எல்லாம் இத்யாதி$_{3}$).

ஈ— (மாவாய் இத்யாதி) o கேஶி வாயை அநாயாஸேந o_1 கிழித்து, o_2 யமளார்ஜுநங்களின் நடுவே போய், மஹாபலி அபஹரித்துக்கொண்ட பூமியை p எல்லே நடந்து மீட்டுக்கொண்டு, இப்படி உபகாரங்களைப்பண்ணி, பின்னையும் q ஒன்றும் செய்யாதானாய்க் குறைப்பட்டு, r இவற்றினுடைய ரக்ஷணத்திலே உத்யுக்தனாயிருக்குமவனே! s இப்படி எல்லாம் செய்யச்செய்தேயும் ஒன்றும் செய்யாதாரைப்போலே ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணினவனே! (t இனி எம்மைச் சோரேலே) u கேஶி தொடக்கமான விரோதிகளைப் போக்கினாற்போலே தம் விரோதியையும் போக்கி அவன்வந்து முகங்காட்ட, சொல்லுகிறாராதல்; v "தம்முடைய ஆபத்தின் கனத்தாலே வந்து முகங்காட்டும்" என்னும் விஶ்வாஸத்தாலே சொல்லுகிறாளாதல். (இனி) w1. "बुद्ध्वा कालमतीतञ्च मुमोह परमातुरः" (புத்த்வா காலமதீதஞ்ச முமோஹ பரமாதுர:) என்னுமாபோலே, x முன்புள்ள காலம்

அ— t.u.v "சோரேல்" என்றது எந்த அவஸ்தையைப் பற்றச்சொல்லுகிறது? என்ன; இரண்டு வகையாகக் காட்டுகிறார் (கேஶி தொடக்கமான இத்யாதி) v (தம்முடைய ஆபத்தின் கனத்தாலே) இதி த்விதீயநிர்வாஹே A "ஏத்தவேழுலகுங்கொண்ட" இத்யத்ரைவ ஸம்ஶ்லேஷ இதி பாவ:. இரண்டாம் அர்த்தம்—"ஸமீபஸ்தனாயிருந்தே முகங்காட்டுகிறிலன்; அவஶ்யம் முகங்காட்டும்" என்னும் விஶ்வாஸத்தாலே—என்றபடி. t.w "இனி" என்றதுக்கும், "எம்மைச் சோரேலே" என்றதுக்கும் அர்த்தம் அருளிச்செய்கிறார் (புத்த்வா காலம் இத்யாதி) x.y "முன்புள்ள காலம் இழந்ததாகிலும்" என்றத்தாலே பலிதத்தை அருளிச்செய்கிறார் (போனகாலத்தை இத்யாதி)

ஜீ— t.u.v "இனி எம்மைச் சோரேல்" என்றது எந்த அவஸ்தையைப்பற்றச் சொல்லுகிறது? என்ன; இரண்டுவகையாக அருளிச்செய்கிறார் (கேஶி இத்யாதியாலும், தம்முடைய இத்யாதியாலும்) 'வந்து முகங்காட்டச் சொல்லுகிறார்' என்று முந்தின அர்த்தம்; "ஸமீபஸ்தனாயிருந்தே முகங்காட்டுகிறிலன்; அவஶ்யம் முகங்காட்டும்" என்னும் விஶ்வாஸத்தாலே - என்று இரண்டாம் அர்த்தம். t.w "இனி" என்றதுக்குத் தாத்பர்யம் (புத்த்வா காலம் இத்யாதி) கிஷ்கிந்தாகாண்டே மால்யவதி ராம:. 1. "ஶாரதீம் ரஜநீஞ்சைவ த்ருஷ்ட்வா ஜ்யோத்ஸ்நாநுலேபநாம் |

ப்ர—o,o_1(மாவாய் பிளந்து) पञ्चमांशे षोडशे—"व्यादितास्यो महारौद्रस्सोऽसुरः कृष्णबाहुना। निपपात द्विधाभूतो वैद्युतेन यथा द्रुमः॥ १४॥"

o_2 (மருதிடைபோய்) तत्र षष्ठे—"उलूखलमथ तस्यां स कर्षमाण उलूखलम्। यमलार्जुनयोर्मध्ये जगाम कमलेक्षणः॥ १६॥ ततः कटकटाशब्दसमाकर्णनतत्परः। आजगाम व्रजजनो ददर्श च महाद्रुमौ॥ १८॥"

w1.(இனி) किष्किन्धाकाण्डे त्रिंशे माल्यवति रामः—"गुहां प्रविष्टे सुग्रीवे विमुक्ते गगने घनैः। वर्षरात्रोषितो रामः कामशोकाभिपीडितः॥ १॥ पाण्डुरं गगनं दृष्ट्वा विमलं चन्द्रमण्डलम्। शारदीं रजनीं चैव दृष्ट्वा ज्योत्स्नानुलेपनाम्॥ २॥ कामवृत्तं च सुग्रीवं नष्टां च जनकात्मजाम्। बुद्ध्वा कालमतीतञ्च मुमोह परमातुरः॥ ३॥"

11. சோராத வெப்பொருட்கு மாதியாம் சோதிக்கே
ஆராத காதல் குருகூர்ச் சடகோபன்
ஓரா யிரம்சொன்ன வவற்றுள் இவைபத்தும்
சோரார் விடார்கண்டீர் வைகுந்தம் திண்ணனவே.

ஆழ்வார் திருவடிகளே ஶரணம்.

ஈ—இழந்ததாகிலும், இனி மேலுள்ள காலம் இவ்வஸ்துவைக் கைவிடாதொழியவேணும்; y"போன காலத்தை மீட்கவொண்ணாது" என்றதுக்கு ஶோகிக்கிறார். z1. "न मे दुःखं प्रिया दूरे" (ந மே து$_2$:க்க$_2$ம் ப்ரியா தூ$_2$ரே) z$_2$ என்னுடைய ப்ரியையானவள் தூ$_2$ரத்திலே யிருக்கிறாள் என்றதுக்கு ஶோகிக்கிறேனல்லேன்; அது ஒரு பயணமெடுத்துவிடத் தீரும். 1. "न मे दुःखं हृतेति वा" (ந மே து$_2$:க்க$_2$ம் ஹ்ருதேதி வா) வலிய ரக்ஷஸ்ஸாலே பிரிவு வந்தது என்றதுக்கு ஶோகிக்கிறேனல்லேன்; அது அவன் தலையை அறுக்கத் தீரும். z$_3$1. "एतदेवानुशोचामि" (ஏததே$_3$வாநுஶோசாமி) இது ஒன்றுமே எனக்கு ஶோகநிமித்தம். 1. "वयोऽस्या ह्यतिवर्तते" (வயோऽஸ்யா ஹ்யதிவர்த்ததே) போன பருவம் இப்பால் மீட்கவொண்ணாதிறே. 10.

அ-z"போனகாலத்தை மீட்கவொண்ணாது" என்று ஶோகித்த பேருண்டோ? என்ன (ந மே து$_2$:க்க$_2$ம் இத்யாதி$_3$) z$_2$ (என்னுடைய ப்ரியையானவள் இத்யாதி$_3$) 1. "வயோऽஸ்யா ஹ்யதிவர்த்ததே" என்று—போன பருவத்தை மீட்கையினுடைய து$_3$ஶ்ஶகத்வம் சொல்லுகையாலே, இவைகளுடைய ஸௌஶகத்வம் த்$_3$யோதிதமிறே. z$_3$ ஏததே$_3$வ-ஏதத் ப்ரத்யேவ. "மாவாய் பிளந்து என்று தொடங்கி, மூவா முதல்வா - வேவாரா வேட்கைநோய் மெல்லாவி உள்ளுலர்த்த உன்பாலே வீழ்த்தொழிந் தாய்; இனி எம்மைச் சோரேல்" என்று அந்வயம். "வேவாரா வேட்கைநோய் மெல்லாவி உள்ளுலர்த்த, இராப்பகல் ஓவாதே வீழ்த்தொழிந்தாய்" என்று தொடங்கி, உரை அந்வயம். 10.

ஜீ—காமவ்ருத்தஞ்ச ஸௌக்$_3$ரீவம் நஷ்டாஞ்ச ஜநகாத்மஜாம்। பு$_3$த்$_3$த்$_4$வா காலமதீதஞ்ச முமோஹ பரமாதுர:॥" x,y"முன்புள்ள காலம் இழந்ததாகிலும்" என்றத்தால் ப$_2$லிதமாஹ (போன காலத்தை இத்யாதி$_3$) z அப்படி ஶோகித்த பேருண்டோ? என்ன (ந மே இத்யாதி$_3$) யுத்$_3$த$_4$காண்டே$_3$ பஞ்சமே. ஸமுத்$_3$ரதீரே லக்ஷ்மணம் ப்ரதி ராம:— 1. "ந மே து$_3$:க்க$_2$ம் ப்ரியா தூ$_3$ரே ந மே து$_3$:க்க$_2$ம் ஹ்ருதேதி வா। ஏததே$_3$வாநுஶோசாமி வயோऽஸ்யா ஹ்யதிவர்த்ததே॥" z$_2$ (என்னுடைய ப்ரியையானவள் இத்யாதி$_3$) 1. "வயோऽஸ்யா ஹ்யதிவர்த்ததே" என்று—போன பருவத்தை மீட்கையினுடைய து$_3$ஶ்ஶகத்வம் சொல்லுகையாலே, கீழ்ச்சொன்னவற்றினுடைய ஸௌஶகத்வம் த்$_3$யோதிதமிறே. "மாவாய் இத்யாரப்$_4$ய முதல்வா - வேவாரா இத்யாரப்$_4$ய வீழ்த்தொழிந் தாய் - இனி எம்மைச் சோரேலே" இத்யந்வய:. உள்ளுலர்த்த-உள்ளே உலர்த்தும்படியாக. 10.

ப்ர-z1. (மீட்கவொண்ணாதென்று) युद्धकाण्डे पञ्चमे—"निविष्टायां तु सेनायां तीरे नद-नदीपतेः। पार्श्वस्थं लक्ष्मणं दृष्ट्वा रामो वचनमब्रवीत्॥ ३॥ शोकश्च किल कालेन गच्छता ह्यपगच्छति। मम चापश्यतः कान्तामहन्यहनि वर्धते॥ ४॥ न मे दुःखं प्रिया दूरे न मे दुःखं हृतेति वा। एतदेवानुशोचामि वयोऽस्या ह्यतिवर्तते॥ ५॥"

ஆ— 11. வ்யா:— (சோராத) இப்படி எம்பெருமானைப் பிரிந்த வ்யஸநத்தாலே முடியப்புகுகிற தம்மை உஜ்ஜீவிப்பிக்கைக்காக வந்து தோற்றியருளின எம்பெருமானைக் கண்டு தாமும் உஜ்ஜீவித்து, ஸ்வோஜ்ஜீவநத்தாலே எம்பெருமான் ஸர்வேஶ்வரத்வம் அவிகலமானபடியைக்கண்டு ப்ரீதராய், "அடியேன் இவனுடைய ஸர்வேஶ்வரத்வம் அவிகலமாகப் பெற்றேனாகாதே!" என்று உகந்துகொண்டு எம்பெருமானுடைய ஸர்வேஶ்வரத்வத்தை அநுபவித்து, 'இப்படி ஸர்வேஶ்வரனாயிருந்த எம்பெருமான் பக்கலுள்ள நிரவதிகமான ஆசையாலே சொன்ன இத்திருவாய்மொழியை விடாதார் ஒருநாளும் எம்பெருமானைப் பிரியார்; இது நிஶ்சிதம்' என்கிறார். 11.

திருக்குருகைப்பிரான்பிள்ளான் திருவடிகளே ஶரணம்.

ஒ— அவ:— நிகமத்தில் — 'இத்திருவாய்மொழி கற்றார் திருநாட்டிலே நித்யவாஸம் பண்ணப்பெறுவார்; இது நிஶ்சிதம்' என்கிறார்.

வ்யா:— (சோராத என்று தொடங்கி) ஆழ்வாரோடே ஸம்ஶ்லேஷித்து அவரை உளராக்குகையாலே ஒன்றொழியாமே ஸகலபதார்த்தத்துக்கும் ஈஶ்வரனானவன் திருவடிகளிலே, லோகத்தில் அந்யபரமான பதார்த்தங்களெல்லாம் தம்மைப் போலே எம்பெருமானைப்பிரிந்து நோவுபடுகிறனவாக ப்ரமிக்கைக்கிடான நிரவதிக பக்தியையுடையரான ஆழ்வார். ஓராயிரம் - விலக்ஷணமாயிருக்கை. 11.

நஞ்சீயர் திருவடிகளே ஶரணம்.

ப— அவ:— அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு பலம் பரமபதப்ராப்தி என்று அருளிச்செய்கிறார்.

சோராத—ஒன்றும் சோராதபடி, எப்பொருட்கும்—எல்லாப்பொருளுக்கும், ஆதியாம்—காரணபூதனான, சோதிக்கே—பரஞ்ஜ்யோதிஶ்ஶப்தவாச்யனுக்கே, ஆராத — (ஒருகாலும்) த்ருப்தி பிறவாத, காதல் — அபிநிவேஶத்தையுடைய, குருகூர்ச்சடகோபன் — ஆழ்வார், ஓர் — அத்விதீயமான, ஆயிரம் — ஆயிரமாக, சொன்ன அவற்றுள் — சொன்னவற்றுக்குள்ளே, இவை பத்தும் — (அதிப்ரேம ப்ரகாஶகமான) இவை பத்தையும், சோரார்—நழுவதில்லாதவர்கள், வைகுந்தம்— பரமபதத்தை, திண்ணனா—அறுதியாக, விடார் கண்டீர்—விடாதவர்கள் கிடீர்.

இது - கலிவிருத்தம். நாலடித்தாழிசையுமாம். 11.

வாதிகேஸரி அழகியமணவாளச் சீயர் திருவடிகளே ஶரணம்.

இ— அவ:— நிகமத்தில் — 'இப்பத்தையும் அப்யஸிப்பார் பரமபதத்திலே நித்ய வாஸம் பண்ணப்பெறுவர்; இது நிஶ்சிதம்' என்கிறார்.

வ்யா:— (சோராத இத்யாதி) இப்படி இவரோடே கலந்து இவரை உளராக்குகையாலே, ஒன்றொழியாதபடி ஸகல பதார்த்தங்களுக்கும் ஈஶ்வரனுமாய்,

இ—சோதி - முகமலர்த்தியும் தன்னதாம்படியிருந்தான். இவர் ஒருவரையும் சோர விட்டானுகில், ஸர்வஶேஷியாகமாட்டானே. (சோதிக்கே) நிரவதிகதேஜோ ரூபமான விக்ரஹத்தையுடையனுனன் என்றுமாம். ஸர்வரக்ஷகத்வமும் நிலை நின்றது; வடிவழகும் புதுக்கணித்தது. (ஆராத இத்யாதி) லோகத்தில் ஸகல பதார்த்தங்களும் தம்மைப்போலே அவனைப்பிரிந்து நோவுபடுகிறனவாகக் கொண்டு ப்ரமிக்கும்படியான நிரவதிகபக்தியையுடையவர். நிரூபகதர்மம் இவர்க்குக் காதலாயிற்று. தம் படி சொல்லிலும் தாமே சொல்லுமத்தனை. (ஓராயிரம்) அபிநிவேஶத்தோடே அருளிச்செய்ததாகையாலே விலக்ஷணமான ஆயிரம். (அவற்றுள் இவை பத்தும் சோரார்) அவற்றிலும் விலக்ஷணமான இவை பத்தையும் சோராதவர்கள். (விடார் கண்டீர் வைகுந்தம்) எல்லாரும் இழந்து நோவு படுகிறனவாக அநுஸந்திக்கவேண்டும் தேஶத்தை விட்டு, ஸகலரும் பகவல் லாபத்தாலே களித்து வர்த்திக்கும் தேஶத்திலே நித்யவாஸம் பண்ணப்பெறுவர். கண்டீர் என்று-கையெடுத்துக் கூப்பிடுகிருர். (திண்ணனவே) ஸுநிஶ்சிதம். 11.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே ஶரணம்.

ஈ— அவ:— நிகமத்தில் — a இத்திருவாய்மொழி கற்ருர், கண்ணுல் கண்டதெல்லாம் பகவதலாபத்தாலே நோவுபடுகிற ஸம்ஸாரத்திலேயிருந்து நோவுபடாதே, கண்டா ரெல்லாம் பகவல்லாபத்தாலே களித்து வர்த்திக்கும் நாட்டிலே புகப்பெறுவர்— என்கிருர்.

வ்யா:— (b சோராத எப்பொருட்கும் ஆதியாம் சோதிக்கே) இவ்வளவிலே வந்து இவரோடே கலந்து இவரை உளராக்குகையாலே, ஒன்ருெழியாதபடி ஸகல

அ— நிகமம் (சோராத இத்யாதி) a.(72v) ''இனி எம்மைச் சோரேல்'' (10) என்கிறவிடத்தில் த்விதீயார்த்தாபிப்ராயேண இந்த அவதாரிகை. a ''இத்திருவாய்மொழி கற்ருர்'' இத்யாதி வாக்யஸ்யார்த்த: — ''இவை பத்தும் சோரார் விடார் கண்டீர் வைகுந்தம்'' இத்யேத தத்பதார்த்தோபத்யாஸாவஸரே (77 m.n) ஸ்பஷ்டோ பவிஷ்யதி. ஏதத்தஶகாத்யேதருணும் பராங்குஶார்ய பாவவ்ருத்திரபி ஸ்யாதிதி பாவ:.

b சோராத எப்பொருட்கும்-ஒன்றும் குறையாத எல்லாப் பதார்த்தங்களுக்கும், ஆதியாம் ஈஶ்வரனும். c,d இவரொருத்தருக்கு முகங்காட்டாவிட்டால் ஸர்வேஶ்வரத்வம் அழியுமோ? என்ன; வ்யதிரேகத்தால் பலிதமான ஆகாரத்தை, ப்ரணயித்வ நிபந்தநமாகவும், வாஸ்தவ

ஜீ— நிகமம் (சோராத இத்யாதி) a ''இவை பத்தும் சோரார் விடார் கண்டீர் வைகுந்தம்'' என்கிற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை (இத்திருவாய்மொழி கற்ருர் இத்யாதி) (72v) இந்த அவதாரிகை-''இனி எம்மைச் சோரேல்'' (10) என்கிறவிடத்தில் த்விதீயார்த்தாபிப்ராயேண. இப்பத்தும் கற்ருர்க்கு ஆழ்வாருடைய பாவவ்ருத்தியுண்டாம் என்று தாத்பர்யம்.

b சோராத எப்பொருட்கும்-ஒன்றும் குறையாத எல்லாப் பதார்த்தங்களுக்கும், ஆதியாம் ஈஶ்வரனும். c இவரொருத்தருக்கு முகங்காட்டாவிடில் ஸர்வேஶ்வரத்வம் அழியுமோ? என்ன

ஈ—பத₃ார்த்த₂ங்களுக்கும் ஈஶ்வரனுமாய், b₂ இவரோடே வந்து கலந்தத்தாலே உஜ்ஜ்வலனுமாயிருந்தான். c இவர்க்கு வந்து முகங்காட்டுவதற்கு முன்பு ஸர்வேஶ்வரத்வமும் அழிந்ததுபோலே கிடந்தது; d இவரொருத்தரையும் சோரக்கொடுக்கவே ஸர்வேஶ்வரத்வம் அழியுமிறே. e இவர் இழவுதீர வந்து முகங்காட்டின பின்பு எல்லாப் பொருட்கும் நிர்வாஹகனுனன். (சோதிக்கே) f பேறிழவுகள் இவரதன்றிக்கே, "தன்னது" என்னுமிடம் வடிவில் புகரிலே தோற்றுநின்றது. g 1. "कृतकृत्यः" (க்ருதக்ருத்ய:) என்னும்படியானுன்.

(h ஆராத காதல்) i இத்திருவாய்மொழியால் சொல்லிற்றாயிற்று - கண்ணுல் கண்ட பதா₃ர்த்த₂ங்களுமெல்லாம் ப₄க₃வத₃லாப₄த்தாலே தம்மைப்போலே நோவுபடுகிறனவாகக்கொண்டு, அவற்றுக்குமாகத் தாம் நோவுபடும்படியான இவருடைய அபி₄நிவேஶமாயிற்று. (காதல் குருகூர்ச்சடகோபன்) காதலேயிட்டாயிற்று இவரை

அ—மாகவும், இரண்டு வகையாக அருளிச்செய்கிருர் (இவர்க்கு வந்து இத்யாதி₃ வாக்யத்₃வயத்தாலே) e வாஸ்தவமான ஆகாரத்திலே அந்வயஸித்₃த₄மான ப்ரமேயத்தை அருளிச்செய்கிருர் (இவர் இழவுதீர இத்யாதி₃) b₂,f "இவரோடே வந்து கலந்தத்தாலே உஜ்ஜ்வலனுமாயிருந்தான்" என்றத்தால் ப₂லிதத்தை அருளிச்செய்கிருர் (பேறிழவுகள் இத்யாதி₃) g அவன் அப்படியிருக்குமோ? என்ன (க்ருதக்ருத்ய: இத்யாதி₃) அத₂வா, "தன்பேறு" என்னுமிடம் வடிவில் புகரிலே தோற்றும் என்றதுக்கு ப்ரமாணம் (க்ருதக்ருத்ய இத்யாதி₃).

h,i "ஆராத காதல்" இதி இதா₃நீம் கிமர்த்த₂மபி₄த₃த₄தி? இத்யத்ராஹ (இத்திருவாய்மொழியால் இதி) j ஸ்வீயம் வைப₄வம் ஸ்வயமேவ கிமர்த்த₂ம் வத₃தி? இத்யத்ராஹ (தம் படி இத்யாதி₃) h,j (தம் படி சொல்லும்போதும்) * ஆராதவின் தாத்பர்யம். 'அவர் ப₄க்திஸ்வபா₄வம் அவர்க்கே தெரியுமதொழிய, பிறர்க்குத் தெரியாதிறே; இவருடைய ஆகாரங்கள் ஒரிடத்திலே காணுமையாலே' என்றபடி. k "ஆராத காதல் குருகூர்ச்சடகோபன் சொன்ன ஓராயிரமான அவற்றுள் இவை பத்து" இத்யந்வயம் ஹ்ருதி₃ நித₄யாஹ (இக்காதலோடேயாயிற்று இதி) A "அவா

ஜீ-(இவர்க்கு வந்து இத்யாதி₃) d அதெப்படி? என்ன (இவரொருத்தரையும் இத்யாதி₃) b₂,f இவரோடு வந்து கலந்தத்தாலே உஜ்ஜ்வலனுயிருந்தத்தால் ப₂லிதமாஹ (பேறிழவுகள் இத்யாதி₃) g அவன் அப்படியிருக்குமோ? என்ன (க்ருதக்ருத்ய இத்யாதி₃) ஸ்ரீஸங்க்ஷேபே—1. "அபி₄ஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்₃ரம் விபீ₄ஷணம்। க்ருதக்ருத்யஸ்தத₃ா ராமோ விஜ்வர: ப்ரமுமோத₃ ஹ॥".

h,i "ஆராத காதல்" என்று இப்போது எதுக்காகச் சொல்லுகிருர்? என்ன (இத்திருவாய்மொழியால் இத்யாதி₃) j ஸ்வப்ரஶம்ஸை பண்ணலாமோ? என்ன (தம் படி இத்யாதி₃) h,j இது * ஆராதவின் தாத்பர்யம். 'அவர் ப₄க்திஸ்வபா₄வம் அவர்க்கே தெரியுமதொழிய, பிறர்க்குத் தெரியாதிறே; இவருடைய ஆகாரங்கள் ஒரிடத்திலும் காணுமையாலே' என்றபடி. k "ஆராத

ப்ர—g1. (நிகமம்) (சோராத இத்யாதி₃) (சோதிக்கே) सङ्क्षेपे — "अभिषिच्य च लङ्कायां राक्षसेन्द्रं विभीषणम् । कृतकृत्यस्तदा रामो विज्वरः प्रमुमोद ह ॥ ८५ ॥

மணவாளமாமுனிகள் திருவடிகளே ஶரணம்.

A 10-10-11.

ஈ—நிரூபிப்பது. j தம் படி சொல்லும்போதும் தாமே சொல்லவேணுமே. (சொன்ன) k இக்காதலோடேயாயிற்று ஆயிரம் அருளிச்செய்தது. (அவற்றுள் l இவை பத்தும்) l₂ அல்லாதவை ஒருதலையாக, இது ஒருதலையாம்படி அக்காதலை முக்தகண்டமாகச் சொன்ன திருவாய்மொழியாயிற்று இது. (இவை பத்தும் m சோரார் விடார் கண்டீர் வைகுந்தம்) இங்கேயிருந்து, கண்ணுக்கு இலக்கான பதார்த்தங்கள் அடங்கலும் பகவதலாபத்தாலே நோவுபடுகிறனவாக n அநுஸந்திக்குமவர்கள், இவ்விருப்பை விட்டு, கண்ணால் கண்டார் அடங்கலும் பகவல்லாபத்தாலே களிக்கும் நித்யவிபூதியை விடாதே நித்யாநுபவம் பண்ணப்பெறுவர்கள். கண்டீரென்று o கையெடுத்துக் கூப்பிடுகிறார். (திண்ணனவே) இது ஸுநிஶ்சிதம். p இவ்வருகே சிலரைப்பற்றிச் சொல்லிற்றோர் அர்த்தமாகிலிறே ஸம்ஶயவிபர்யயங்களுள்ளது; பகவத்ப்ரபாவத்தைப் பற்றிச் சொன்னதாகையாலே இதுதனக்கு எங்கேனும் ஶபதம் பண்ணலாம்.

முதற்பாட்டிலே தொடங்கி, நாரை தொடக்கமாக, அன்றில், கடல், காற்று, மேகம், சந்த்ரன், இருள், கழி, விளக்கு இப்பதார்த்தங்களைக் குறித்து அநுஶோகித்து மிகவும் தளர்ந்த வளவிலே அவன் வந்து முகங்காட்ட, "இனி என்னை விடாதொழியவேணும்" என்று, இத்திருவாய்மொழி கற்றார்க்குப் பலத்தைச் சொல்லித் தலைக்கட்டினார். 11.

வடக்குத் திருவீதிப்பிள்ளை திருவடிகளே ஶரணம்.

அ—விலந்தாதிகளால் இவையாயிரம்'' இதி ஹ்யுச்யதே. l, l₂ ''இவைபத்து'' என்றதுக்குத் தாத்பர்யம் (அல்லாதவை இத்யாதி) m, n (சோரார்) சோராதே-விடாதே: அநுஸந்திக்குமவர்கள் என்றபடி. n அநுஸந்திக்குமவர்கள்-அநுஸந்திக்க யோக்யரானவர்கள். o ''விடார்'' என்ன அமைந்திருக்க, ''கண்டீர்'' என்றதின் தாத்பர்யம் (கையெடுத்து) என்றது. p 1. 'விஜ்ஞாநஸாரதிர்யஸ்து மந:ப்ரக்ரஹவாந் நர:। ஸோऽத்வந: பாரமாப்நோதி தத் விஷ்ணோ: பரமம் பதம்॥'' 2. ''ஸ கல்வேவம் வர்த்தயந் யாவதாயுஷம் ப்ரஹ்மலோகமபிஸம்பத்யதே'' இத்யாதிநா யாவதாயுஷம் யமநியமாத்யஷ்டாங்கயோகஜந்ய தர்ஶநஸமாநாகார பக்திநிஷ்டஸ்ய ப்ராப்யத்வேந உச்யமாநம் பரமபதம், ஏதத்தஶகாத்யயநமாத்ரேண அத்ரோக்த பாவவ்ருத்திமந்தஸ் ஸந்தோ ந த்யஜந்தி, ப்ராப்நுவந்த்யேவ; இதம் ஸுநிஶ்சிதமேவ — இதி ஸாவதாரணம் கதமபி தீயத இத்யத்ராஹ (இவ்வருகே சிலரை இதி) ''இவை பத்தும் சோரார் வைகுந்தம் விடார்கண்டீர். இது திண்ணனவே'' இத்யந்வய:. ''சோராத என்று தொடங்கி, வைகுந்தம் திண்ணனவே விடார் கண்டீர்'' என்று உரை அந்வயம். 11.

ஆத்தான் ஜீயர் திருவடிகளே ஶரணம்.

ஜீ-காதல் குருகூர்ச்சடகோபன் சொன்ன ஓராயிரம்'' என்று அந்வயித்து அர்த்தம் (இக்காதலோடே இத்யாதி) l, l₂ ''இவை'' என்றதுக்கு பாவம் (அல்லாதவை இத்யாதி) m, n சோரார்-விடாதவர்கள்; அநுஸந்திக்குமவர்கள் என்றபடி. n அநுஸந்திக்குமவர்களாவது - அநுஸந்திக்க யோக்யரான வர்கள் என்றபடி. o ''விடார்'' என்ன அமைந்திருக்க, ''கண்டீர்'' என்றதின் தாத்பர்யம் (கையெடுத்துக் கூப்பிடுகிறார்) என்றது. p அப்யஸித்த மாத்ரத்திலே இது கூடுமோ? என்ன (இவ்வருகே சிலரை இத்யாதி) ''சோராத இத்யாரப்ய, இவை பத்தும் சோரார் வைகுந்தம் விடார்கண்டீர்; இது திண்ணனவே'' இத்யந்வய:. 11.

ராமாநுஜ ஜீயர் திருவடிகளே ஶரணம்.

த்₃ரமிடோ₃பநிஷத் ஸங்க₃தி - வாயுந்திரை

१. पूर्वानुभूतमुरवैरिगुणाभिवृद्धतद्बाह्यसङ्गमरुचिस्तदलाभखिन्नः।
सर्वानपि स्वसमदुःखिन एव भावानाह द्वितीयशतकस्य शठारिराद्ये॥ ११॥

1. பூர்வாநுபூ₄தமுரவைரிகு₃ணாபி₄வ்ருத்₃த₄-
தத்₃பா₃ஹ்யஸங்க₃மருசிஸ் தத₃லாப₄கி₂ந்ந:।
ஸர்வாநபி ஸ்வஸமது₃:க்கி₂ந ஏவ பா₄வா-
நாஹ த்₃விதீயஶதகஸ்ய ஶடா₂ரிராத்₃யே ॥ 11 ॥

அழகிய மணவாளச் சீயர் திருவடிகளே ஶரணம்.

த்₃ரமிடோ₃பநிஷத் தாத்பர்யரத்நாவளி - வாயுந்திரை

२. निद्रादिच्छेदकत्वादरतिजननतोऽजस्रसङ्क्षोभकत्वात्
अन्वेष्टुं प्रेरकत्वाद्विलयवितरणात् कार्श्यदैन्यादिकृत्त्वात्।
चित्ताक्षेपाद्विसंज्ञीकरणत उपसंशोषणावर्जनाभ्याम्
दृष्टास्वादस्य शौरेः क्षणविरहदशादुस्सहत्वं जगाद॥ २-१॥

2. நித்₃ராதி₃ச்சே₂த₃கத்வாத₃ரதிஜநநதோऽஜஸ்ரஸங்க்ஷோப₄கத்வாத்
அந்வேஷ்டும் ப்ரேரகத்வாத் விலயவிதரணாத் கார்ஶ்யதை₃ந்யாதி₃க்ருத்த்வாத்।
சித்தாக்ஷேபாத் விஸம்ஜ்ஞீகரணத உபஸம்ஶோஷணாவர்ஜநாப்₄யாம்
த்₃ருஷ்டாஸ்வாத₃ஸ்ய ஶௌரே: க்ஷணவிரஹத₃ஶாது₃ஸ்ஸஹத்வம் ஜகா₃த₃ ॥ 2-1 ॥

வ்யா:— (1) (நித்₃ராதி₃ச்சே₂த₃கத்வாத்) [மடநாராய்! ஆயும் அமருலகும் துஞ்சிலும் நீ துஞ்சாயால், எம்மேபோல் நீயும் திருமாலால் நெஞ்சம் கோட்பட்டாயே] தன்னைப் பிரிந்திருக்கிற பேர்களுக்கு நித்₃ராதி₃நிவாரகனாகையாலும்; (2) (அரதிஜநநத:) [கூர்வாய அன்றிலே! சேட்பட்ட யாமங்கள் சேராதிரங்குதியால்] ஒருகாலும் த₄ரியாதபடி ஶைதி₂ல்யத்தை உண்டாக்குகையாலும்; (3) (அஜஸ்ர ஸங்க்ஷோப₄கத்வாத்) [நீ முற்றக் கண்துயிலாய் நெஞ்சுருகி ஏங்குதியால்] ஸர்வகாலமும் க்ஷோப₄த்தை உண்டாக்குகையாலும்; (4) (அந்வேஷ்டும் ப்ரேரகத்வாத்) [கடலும் மலையும் விசும்பும் துழாய் எம்போல் சுடர்கொள் இராப்பகல் துஞ்சாயால்] தி₃வாராத்ர விபா₄க₃மற எல்லா தே₃ஶத்திலும் தன்னை அந்வேஷிக்கைக்கு ப்ரேரகனாகையாலும்; (5) (விலயவிதரணாத்) [தோழியரும் யாமும்போல் நீராய் நெகிழ்கின்ற] முடியும் அவஸ்தை₂யைப் பண்ணுகையாலும்; (6)(கார்ஶ்யதை₃ந்யாதி₃க்ருத்த்வாத்) [நாண்மதியே! நீ இந்நாள் மைவான் இருளகற்றாய் மாழாந்து தேம்புதியால்] கார்ஶ்யதை₃ந்யாதி₃களைப் பண்ணுகையாலும்; (7) (சித்தாக்ஷேபாத்) [தோற்றோம் மடநெஞ்சம் எம்பெருமான் நாரணற்கு] மநஸ்ஸைக்கொண்டு போதுபோக்கவொண்ணாதபடி அபஹரிக்கையாலும்; (8) (விஸம்ஜ்ஞீகரணத:) [மாநீர்க்கழியே! போய் இருளுற்று இராப்பகல் துஞ்சிலும் நீ துஞ்சாயால்] ஒன்றுந்தெரியாதபடி மதிமயக்கத்தை உண்டாக்குகையாலும்; (9) (உபஸம்ஶோஷணாவர்ஜநாப்₄யாம்) [காதல்நோய் மெல்லாவி உள்ளுலர்த்த, மாவாய் பிளந்து மருதிடைபோய் மண்ணளந்த] ம்ருது₃வாயிருக்கிற ஆத்மாவைக் குருத்துவற்ற உலர்த்துகையாலும், மறந்து பிழைக்கவொண்ணாதபடி விரோதி₄நிரஸநாதி₃ வஶீகரண சேஷ்டிதங்களை உடையனாகையாலும், நிரதிஶயபோ₄க்₃யனான எம்பெருமானுடைய விஶ்லேஷம் ஒரு க்ஷணமாத்ரமும் து₃ஸ்ஸஹமென்று ''வாயும் திரையுகளும்'' என்கிற த₃ஶகத்திலே ஆழ்வார் அருளிச்செய்தார் என்கிறார். 11.

வேதா₃ந்ததே₃ஶிகர் திருவடிகளே ஶரணம்.

திருவாய்மொழி நூற்றந்தாதி

11. வாயுந் திருமால் மறையநிற்க ஆற்றாமை
போய்விஞ்சி மிக்க புலம்புதலாய்—ஆய
அறியா தவற்றோ டணைந்தழுத மாறன்
செறிவாரை நோக்கும் தினிந்து.

பெரிய ஜீயர் திருவடிகளே சரணம்.

அவ:— (வாயும் திருமால்) இதில் - ஸகலபதா₂ர்த்த₂ங்களையும் ஸமது₃:க்கி₂களாக எண்ணி து₃:க்கி₂த்தபடியைப் பேசின பாசுரத்தை அநுவதி₃த்து அருளிச் செய்கிறார். எங்ஙனேயென்ன; A "பெருநிலங்கடந்த நல்லடிப்போது அயர்ப்பிலன் அலற்றுவன் தழுவுவன் வணங்குவன்" என்று இவர் பாரித்தபடியே அநுப₄விக்கப் பெறாமையால் § ஷட்₃கு₃ணஸாம்யத்தாலே தாமான தன்மை குலைந்து, பிராட்டியான தன்மையை ப₄ஜித்துத் தூதுவிட க்ஷமராகாதே B அஞ்சிறைய மடநாரையில்; இங்கு C "நம்பியைத் தென்குறுங்குடிநின்ற" இத்யாதி₃ப்படியே-மேன்மை, நீர்மை, வடிவழகு மூன்றும் குறைவற உண்டாய், அவதாரத்தில் பிற்பாடரும் இழக்க வேண்டாதபடி முகங்கொடுத்துக்கொண்டு நிற்கிற ஸ்த₂லமான அர்ச்சாவதாரத்திலே அநுப₄விக்க ஆசைப்பட்டுக் கிடையாமையாலே. கண்ணுஞ்சுழலையிட்டு, நாரை, அன்றில், கடல், வாடை, வானம், மதி, இருள், கழி, விளக்கு தொடக்கமான லௌகிகபதா₂ர்த்த₂ங்களும் தம்மைப்போலே ப₄க₃வத்₃விரஹத்தாலே நோவுபடுகிறனவாகக்கொண்டு அவற்றுக்குமாகத் தாம் நோவுபட்டுச் சொல்லுகிறபடியை அந்யாபதே₃ஶத்தாலே பேசிச்சொல்லுகிற D வாயுந்திரையுகளில் அர்த்த₂த்தை, (வாயும் திருமால்) இத்யாதி₃யாலே அருளிச்செய்கிறார்.

வ்யா:— (**வாயும் திருமால் மறையநிற்க**) அநுப₄வயோக்₃யமாம்படி கிட்டுகையே ஸ்வபா₄வமாயிருக்கிற ஶ்ரிய:பதியானவன், போ₄க₃ஸாத்ம்ய ஹேதுவாக விஶ்லேஷித்து அத்₃ருஶ்யனாய்நிற்க. கீழே E "மைந்தனை மலராள் மணவாளனை" என்றத்தை அநுபா₄ஷித்தபடி. அன்றிக்கே, F "நீயும் திருமாலால்" என்றதாகவுமாம். G "மணியை வானவர் கண்ணனைத் தன்னதோரணியை" என்று - மேன்மையும், நீர்மையும், வடிவழகும் உடையவன் விஶ்லேஷிக்கையாலே—(**ஆற்றாமை போய் விஞ்சி மிக்க புலம்புதலாய்**) H "ஆராதகாதல்" என்னும்படி விஶ்லேஷவ்யஸநமானது கைகழியப்போய் மிக்கு, 1. "**ஸீதே ம்ருதஸ்தே ஶ்வஶுர: பித்ரா ஹீநோऽஸி லக்ஷ்மண**" என்னும்படி, I "எம்மேபோல் நீயும்" என்று பலகாலும் சொல்லும்படி மிக்க ப்ரலாபமாய். (**ஆய அறியாதவற்றோடு அணைந்தழுத மாறன்**) அசேதநங்களாகையாலே, தம்முடைய து₃:க்க₂த்தை ஆராய அறியாதவற்றைக் கிட்டிக் கட்டிக்

A 1-3-10. B 1-4. C 1-10-9. D 2-1. E 1-10-4. F 2-1-1. G 1-10-11. H 2-1-11 I 2-1-1 & 2.
§ இவ்விடத்தில் ஆசார்யஹ்ருத₃யம் 122-வது சூர்ணையில் திருவுள்ளம்.

ஆதே₃ஶோப நிஷச்ச₂ாயை

இரண்டாம்பத்து முதல் திருவாய்மொழி

வாயுந்திரையுகள் ப்ரவேஶம்:— முதற்பத்தில் - கைங்கர்ய புருஷார்த்₂த்தை உபதே₃ஶித்தார்; இரண்டாம்பத்தில் - அதின் களை அறுக்கிறார்; கீழ்த் திருவாய்மொழியில் பரத்வஸௌலப்₄யங்களையும் வடிவழகையும் அநுப₄வித்து, அத்தால் பா₃ஹ்யஸம்ஶ்லேஷாபேக்ஷை பிறந்து, அப்போதே அது கிடையாமையாலே ஆர்த்தராய், கலந்து பிரிந்தாள் ஒரு பிராட்டி த₃ஶையை ப்ராப்தராய், தன் பரிஸரத்திலுள்ள பக்ஷிகளையும் தன்னைப்போலே ப₄க₃வத₃லாப₄த்தாலே நோவுபடுகிறனவாகக்கொண்டு, அவைகளுக்குமாகத் தான் நோவுபடுகிறார். *

முதற்பாட்டு;— கிட்டாநின்றுள்ள அலைகளானவை மேலே தாவிப்போகா நிற்கிற கழிக்கரையிலேயிருக்கிற பற்றிற்று விடாத நாராய்! என்னுடைய தாய் உறங்கிலும், தே₃வலோகம் உறங்கிலும், நீ உறங்காயோ? ஐயோ! இது என்ன த₃ஶை? ப்ரேமவ்யாதி₄யும் வைவர்ண்யமும் மேலே பரம்பும்படி என்னைப் போலே நீயும் ஶ்ரிய:பதியாலே நெஞ்சு பறியுண்டாயாகாதே? என்கிறார் - வாயும் திரையுகள் இத்யாதி₃யால். 1.

இரண்டாம் பாட்டு;— தீக்ஷ்ணமான வாக்கையுடைய அன்றில்பக்ஷியே! அபஹ்ருதமான மநஸ்ஸையுடையையாய்க்கொண்டு தீ₃ர்க₄மான யாமங்களெல்லாம் படுக்கையிலே சேராதே ஶிதி₂லையாகாநின்றாய்; என்னைப்போலே நீயும் அநந்தஶாயியான அவனுடைய திருவடிகளிலே பட்டுக் குளிர்ந்த திருத்துழாய் மாலையை ஆசைப்பட்டாயாகாதே? என்கிறார் - கோட்பட்ட இத்யாதி₃யால். 2.

மூன்றாம் பாட்டு;— வாராய், கனையாநின்றுள்ள கடலே! ஆசைப்பட்ட பொருளிழவோடே இரவும் பகலும் நீ முற்றக் கண்ணுறங்காதேயிருந்தாய். பின்னையும் ஹ்ருத₃யம் நீராய் உருகிக் கூப்பிடாநின்றாய். அக்₃நியை முழுக்கத் தென்னிலங்கையை உண்ணப் பண்ணினவனுடைய திருவடிகளை ஆசைப்பட்ட நான் அபேக்ஷித்தத்தை அபேக்ஷித்தாயோ? நீ வாழ்ந்திடுக என்கிறார் - காமுற்ற இத்யாதி₃யால். 3.

தி.நா—கொண்டு A"ஆற்றாமைசொல்லி அழுவோமை" என்று ஸமது₃:க்கி₂களாக அழுத ஆழ்வார். B "காற்றும் கழியும் கட்டியழ" என்றாரிறே. (செறிவாரை நோக்கும் திணிந்து) அநந்யப்ரயோஜநராய், அந்தரங்க₃மாக ஆஶ்ரயிக்குமவர்களை த்₃ருஷ்டமாகக் கடாக்ஷிப்பர். தம்மைப்போலே அசேதநங்களைக் கட்டிக்கொண்டு அழாமல், ப₄க₃வத் ஸம்ஶ்லேஷமுண்டாய் ஆநந்தி₃க்கும்படி கடாக்ஷித்தருளுவர். 11.

பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே ஶரணம்.

திருவாய்மொழி இரண்டாம்பத்தில்

முதல் திருவாய்மொழி வ்யாக்₂யானங்கள் முற்றுப்பெற்றன.

A 2-1-7. B ஆசார்யஹ்ருத₃யம் 132.

நாலாம் பாட்டு:— ஸமுத்₃ரத்தையும், பர்வதத்தையும், ஆகாஶத்தையும் துழாவிக்கொண்டு, என்னைப்போலே, சந்த்₃ரஸூர்யர்களைக்கொண்டிருக்கும் இரவும் பகலும் உறங்குகிறாயில்லை; குளிர்ந்த வாடையே! வலிமிக்கிருந்துள்ள ஆயுத₄ஶ்ரேஷ்ட₂மான திருவாழியையுடைய ஸ்வாமியைக் காண்பானாய், நீ ஶரீரத்திலே ப₃ஹுகாலமாக வ்யாதி₄யை அடைந்தாயாகாதே? என்கிறாள்- கடலும் இத்யாதி₃யால். 4.

அஞ்சாம் பாட்டு:— கல்பங்கள்தோறும் இவ்வுலகுக்கு வேண்டும் நீரை முகந்துகொண்டு, தோழியையும் என்னையும் போலே கரைந்து நீராய் நெகிழ்கிற மேக₄மே! நீ வாழ்ந்திடுக. நீயும் மது₄ஸூத₃நனுடைய விரோதி₄நிரஸநஶீலத்திலே அகப்பட்டு, அவனிடத்திலுண்டான ஆஶாபாஶத்தாலே நையாநின்றாயாகாதே? என்கிறாள் - ஊழிதோறூழி இத்யாதி₃யால். 5.

ஆறும் பாட்டு:— நைவே ஸ்வப₄ாவமாக இருக்கிற என்னைப்போலே கலாமாத்ரமான சந்த்₃ரனே! நீ இந்நாள், மைபோலேயிருக்கிற ஆகாஶத்தில் இருளைப்போக்கமாட்டிற்றில்லை; மழுங்கிக்குறையாநின்றாய்; ஐயோ, இதென்ன த₃ஶை? ஐந்து வாயையுடைய அரவணைமேலே கண்வளராநின்றுள்ள திருவாழியையுடைய ஸ்வாமியின் மெய்யான வார்த்தையைக் கேட்டு உன்வடிவில் தேஜஸ்ஸை இழந்தாயாகாதே? என்கிறாள் - நைவாய இத்யாதி₃யால். 6.

ஏழாம் பாட்டு:— எங்களுக்கு ஸ்வாமியான நாராயணனுக்கு நெஞ்சை இழந்தோமாய்க்கொண்டு, எங்களுடைய ஆற்றாமையை ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டு அழுகிற எங்களைப்பற்ற நீ நடுவே வந்து, ஶத்ருக்களுடைய படியிலும் க்ரூரமாய், அநேககாலம் விரோத₄த்திலே நிலைநிற்பாயோ நெருங்கின இருளே? நீ வாழ்ந்திடுக என்கிறாள் - தோற்றோம் இத்யாதி₃யால். 7.

எட்டாம் பாட்டு:— இருளினுடைய வைரம்போலேயிருக்கிற வர்ணத்தையுடைய பெரிய நீரையுடைய கழியே! கெட்டோடிய ஜ்ஞானத்தையடைந்து, ராத்ரியும் பகலும் உறங்கிலும் நீ உறங்குகிறாயில்லை; ஐயோ! உருளுகிற ஶகடத்தை உதைத்த உபகாரகருடைய க்ருபையிலுண்டான பேராசையாலே தரைப்பட்டு நோவுபட்டாயாகாதே? என்கிறாள் - இருள் இத்யாதி₃யால். 8.

ஒன்பதாம் பாட்டு:— நோவத் தொடங்கினால் நொந்து தலைக்கட்டுகையன்றிக்கேயிருக்கிற ப்ரேம வ்யாதி₄யானது ம்ருது₃வாயிருந்துள்ள ஆத்மாவைக் குருத்துவற்றாக உலர்த்த, நந்தாவிளக்கே! நீயும் த₃யநீயையாயிருந்தாய்; செந்தாமரைபோலே விஸ்த்ருதமான கண்களையும், சிறந்த கனிபோலேயிருக்கிற திருவத₄ரத்தையுமுடைய எம்பெருமான் சாத்தியருளின அழகிய ஒளியையுடைய திருத்துழாயை ஆசைப்பட்டு வேவாநின்றாயாகாதே? என்கிறாள் - நொந்தாரா இத்யாதி₃யால். 9.

திருவாய்மொழி இரண்டாம்பத்து இரண்டாம் திருவாய்மொழி

திண்ணன்வீடு ப்ரவேசம்

ஆ— (திண்ணன்வீடு) இப்படி ப்ரஸ்துதமான ஸர்வேஶ்வரத்வத்தை, தம்முடைய ப்ரீத்யதிஶயத்தாலே ஸஹேதுகமாக உபபாதிக்கிறார்.

ஒ— இரண்டாம் திருவாய்மொழியில் — கீழ் தமக்கு வந்த வ்யஸநாதிஶயத்தையும் மறக்கும்படி வந்த ப்ரீதி ப்ரகர்ஷத்தையும் அநுபவித்து விஸ்மிதராயுள்ள ஆழ்வார், "இப்படி ப்ரீதராகைக்குக் காரணம் எம்பெருமான் நிரதிஶய போக்யனாகையால்" என்றும், "இந்த போக்யதைக்கு ஹேது, ஸ்ரஷ்ட்ருத்வ வாத்ஸல்ய ப்ரமுகமான ஸமஸ்த கல்யாணகுணாத்மகனான ஸர்வேஶ்வரனாகை" என்றும் இம்முகத்தாலே அவனுடைய ஈஶ்வரத்வத்தையும் அநுஸந்தித்து, அத்தை உபபாதிக்கிறார்.

ப— இரண்டாம் திருவாய்மொழியில் — கீழ் உக்தமான போக்யத்வத்தினுடைய நிரதிஶயத்வாபாதகமாய், A "மாவாய் பிளந்து" என்று தொடங்கிக் கீழ் ப்ரக்ருதமான ஸௌலப்யத்துக்கும், ஸ்வாமித்வத்துக்கும் ப்ரகாஶகமான மநுஷ்யத்வே பரத்வத்துக்கு உபபாதகமான, அவதார தஶையிலும் அவனுடைய ஸர்வநிர்வாஹகத்வத்தையும், அநிஷ்டநிவ்ருத்தீஷ்டப்ராப்திஹேதுத்வத்தையும்,

பத்தாம் பாட்டு:— "வெந்து' முடியாத ப்ரேமவ்யாதியானது ஸுகுமாரமான ஆத்மாவை வெந்தவிடம் விறகாக எரிக்காநிற்க, இரவும் பகலும் ஓயாதபடி உன் விஷயத்திலேதானே அபிநிவேஶிக்கப்பண்ணி, நீ நிராஶனாயொழிந்தாய்; முகங்காட்டாதே கடக்கநின்றாய்; கேஶியின் வாயைக்கிழித்து, யமளார்ஜுநங்களுக்கு நடுவேபோய், மஹாபலி அபஹரித்த பூமியை எல்லைநடந்து மீட்டுக்கொண்டு, இப்படி உபகரித்தும் அஶாந்தமான உத்யோகத்தையுடையவனே! இனிமேல் என்னைக் கைவிடாதேகிடாய்" என்று, வந்து ஸம்ஶ்லேஷித்த ஈஶ்வரனை ப்ரார்த்திக்கிறார் - வேவாரா இத்யாதியால். 10.

நிகமத்தில்—"நழுவாமலிருக்கிற எல்லாப்பொருளுக்கும் காரணமாயிருக்கிற பரஞ்சோதியின் பொருட்டுத் தானே அபர்யாப்தமான அபிநிவேஶத்தையுடைய குருகூருக்கு நிர்வாஹகரான ஆழ்வார், ஓராயிரமாகச் சொன்னவற்றுள் இந்தப் பத்தையும் ஒரு பாட்டும் விடாதே அநுஸந்திப்பார் வைகுந்தத்தை விடார்கண்டீர்; இது நிஶ்சயம்" என்று உக்தார்த்தஜ்ஞதை நிகமிக்கிறார்-சோராத இத்யாதியால். 11.

ஜீயர் திருவடிகளே ஶரணம்.

ஸ்ரீ ஶுத்தஸத்வாசார்யர் திருவடிகளே ஶரணம்.

A 2-1-10.

ப—ஸர்வாதி₄கத்வத்தையும், ஸர்வப்ரகாரஸமாராத்₄யதையையும், ஆதி₃க்யஸூசக மான புண்ட₃ரீகாக்ஷத்வத்தையும், ஆஶ்ரிதரக்ஷணார்த்த₂மான அர்ணவஶாயித் வத்தையும், அக₄டிதக₄டநாஸாமர்த்₂யத்தையும், ஸர்வ ப்ரகார ரக்ஷகத்வத்தை யும், ஜகஜ்ஜந்மாதி₃ஹேதுத்வத்தையும், ஸர்வதே₃வதா ஸமாஶ்ரயணீயத்வத்தை யும் அருளிச்செய்து, ஸர்வஸ்மாத்பரனாய் ஸர்வஸுலப₄னான ஈஶ்வரனுடைய போ₄க்₃யத்வவர்த்த₄கமான உத்துங்க₃லலிதத்வத்தை உபபாதி₃க்கிறார்.

இ— இரண்டாம் திருவாய்மொழியில் — கீழ் தமக்குப் பிறந்த ஆற்றாமையை மறக்கும்படி முகங்கொடுக்கையால் வந்த ப்ரீதிப்ரகர்ஷத்தை அநுப₄வித்து. "இதுக்கு அடி - அவனுடைய நிரதிஶய போ₄க்₃யதை" என்றும், "அதுக்கு அடி - ஸ்ரஷ்ட்ருத்வ வாத்ஸல்ய ப்ரமுக₂ ஸமஸ்த கல்யாணகு₃ணாத்மகனாகை; அதுக்கு அடி- ஸர்வேஶ்வரத்வம்" என்றும் இம்முக₂த்தாலே ப்ராஸங்கி₃கமாகப் பரத்வத்தை அநுஸந்தி₄த்து, அத்தை உபபாதி₃க்கிறார். கீழே, A"சோராத எப்பொருட்கும் ஆதியாம் சோதிக்கு" என்று ப்ரஸ்துதமான ஈஶ்வரத்வத்தைத் தெரியப் பிறர்க்கு உபதே₃ஶிக்கிறாராகவுமாம். இப்பரத்வம் முதல்திருவாய்மொழியிலே சொல்லிற்றன்றோ? என்னில்; இவர்தாம் ஒருகால் அநுப₄வித்த கு₃ணத்தையே அபூர்வமாக அநுப₄விக்கவல்ல அபி₄நிவேஶத்தையுடையவர்; அவனும் அநுபூ₄த கு₃ணங்களையே அபூர்வமாக அநுப₄விப்பிக்கவல்லன். அதுவேயன்று: அங்கு தாம் அநுப₄வித்தார்; இங்கு பிறர்க்கு உபதே₃ஶிக்கிறார். அங்கு அந்வயத் தாலே உபபாதி₃த்தார்; இங்கு - அந்வயவ்யதிரேகங்களிரண்டாலும் உபபாதி₃க் கிறார். அங்கு ஶ்ருதிப்ரக்ரியையாலே; இங்கு இதிஹாஸ புராண ப்ரக்ரியையாலே.

ச— a கீழில் திருவாய்மொழியில் இவர்க்குப் பிறந்த ஆற்றாமை பேச்சுக்கு நில மன்றிறே; b "கடல் c வெதும்பினால் d விளாவ நீரில்லை" என்னுமாபோலே. e"ஆற்றாமை

அ— திண்ணன்வீடு ப்ரவேஶம்: a...85m "இத்திருவாய்மொழிக்குக் கீழில் திருவாய்மொழியோடு— ப்ராஸங்கி₃கஸங்க₃தியும், ஸாக்ஷாத்ஸங்க₃தியும் என்று இரண்டு வகை ஸங்க₃தி" என்று திருவுள்ளம்பற்றி, முதல் ப்ராஸங்கி₃கஸங்க₃தி அருளிச்செய்கிறார் (கீழில் திருவாய்மொழியில் என்று தொடங்கி) "ப்ராஸங்கி₃கம்" என்றதுக்குத் தாத்பர்யம் — "ஈஶ்வரன் ஸாத்ம்யபோ₄க₃ ப்ரத₃ஞ்கையாலே 'ஒருகாலே தானே வந்து அநுப₄விப்பித்தானாகில் இவர் கிடையார்' என்று பார்த்து, முதலிலே தன்னுடைய ஸர்வேஶ்வரத்வத்தை அநுப₄விப்பித்து, பின்னை B "ஊனில்

ஜீ—திண்ணன்வீடு ப்ரவேஶ—a...85m "கீழோடு இதுக்கு ப்ராஸங்கி₃கஸங்க₃தியும், ஸாக்ஷாத் ஸங்க₃தியும் என்று த்₃வேத₄ா ஸங்க₃தி" என்று திருவுள்ளம்பற்றி, ப்ரத₂மம் ப்ராஸங்கி₃கஸங்க₃தி மாஹ (கீழில் திருவாய்மொழியில் இத்யாதி₃—ப்ரஸ்துதமான ஈஶ்வரத்வத்தை அநுஸந்தி₄த்து அத்தை அருளிச்செய்கிறார் என்னுமளவும்) 85 n (கீழே "மூவா முதல்வா") இத்யாதி₃ வாக்யத் தாலே ஸாக்ஷாத்ஸங்க₃தி:. "ப்ராஸங்கி₃கம்" என்றதுக்கு பா₄வம்—ஈஶ்வரன் ஸாத்ம்ய போ₄க₃ப்ரத₃ஞ்கையாலே, முந்துறத் தன்னுடைய ஈஶ்வரத்வத்தை அநுப₄விப்பித்துப்

A 2-1-11. B 2-3.

ஆ—யோடே முடிந்துபோமித்தனை" என்றிருந்தார்; அநந்தரம் அவன் வந்து முகங் காட்டினவாறே ஆற்றாமை புக்கவிடம் கண்டிலர்; f "இதுக்கு அடியென்?" என்று பார்த்து ஆராய்ந்தவாறே, இதர விஷயங்களினுடைய லாப₄ாலாப₄த்தளவல்லாத விஷயவைலக்ஷண்யமாயிருந்தது; g பிரிந்தபோது தன்னையொழிய வேறொன்று தோற்றுதபடியாய், கலந்தபோதும், தன்னையொழிய மற்றொன்று தோற்றுதபடியான விஷய வைலக்ஷண்யமாயிருந்தது.

h "இதுக்கு அடியென்?" என்று பார்த்தார்; i ஸமஸ்த கல்யாணகு₃ணாத்மகனுகை யாலேயாயிருந்தது; j "இதுதனக்கு அடியென்?" என்று பார்த்தவாறே, ஸர்வேஶ்வர னுகையாலேயாயிருந்தது; k A "உயர்வற உயர்நலமுடையவன்" என்றல், A "அயர்வறும்

அ—வாழுயிரிலே தன்னை அநுப₄விப்பிக்கிருன்" என்று அருளிச்செய்வர். b.c.d (கடல் இத்யாதி₃) போலே என்று வாக்யம்; "கடல் வெதும்பினுல் விளாவ நீரில்லை" என்னும் ந்யாயம் இங்கே உண்டாயிருந்தது என்றபடி. c வெதும்பினுல் - உஷ்ணமானுல். d விளாவ - ஶமிப்பிக்க. e இதின் தாத்பர்யத்தை விவரிக்கிருர் (ஆற்ருமையோடே இத்யாதி₃) f (இதுக்கு அடியென்) என்றது— "அவன் பிரிந்தபோது 'முடிந்துபோமித்தனை?' என்றிருக்கையும், அவன் முகங்காட்டினுல் ஆற்ருமை தெரியாமையுமாகிற இதுக்கு அடியென்?" என்றபடி. g பூர்வவாக்யம் விவ்ருணோதி (பிரிந்தபோது இதி) விஶ்லேஷத₃ஶாயாம் - விஶ்லிஷ்டம் வஸ்து விநா பூர்வதநஸம்ஶ்லேஷோ த்₃யூதாதி₃ஶ்ச பு₃த்₃தி₄கோ₃சரோ ந ப₄வதி; ஸம்ஶ்லேஷே ச - 1. "யத்ர நாந்யத் பஶ்யதி நாந்யச்ச்₂ருணோதி நாந்யத்₃விஜாநாதி ஸ பூ₄மா" இதி ப்ரகாரேண விஶ்லேஷ து₃:க்க₂ப்ரப்₄ருதி ஸர்வம் பு₃த்₃தி₄கோ₃சரம் ந ப₄வதி இத்யர்த்த₂:.

h இதுக்கு அடி-இந்த வைலக்ஷண்யத்துக்கு அடி என்ற. ... i "வைலக்ஷண்யத்துக்கு அடி கு₃ணங்கள்" என்றவிடத்திலே, 2. "தா₃ர்ஜைதஸ் ஸர்வப்ரஜாகாந்தை: ப்ரீதிஸஞ்ஜநநை: பிது:। கு₃ணைர் விருருசே ராமோ தீ₃ப்தஸ் ஸூர்ய இவாம்ஶுபி₄: ॥" என்றத்தை ஸம்வாத₃மாகக் கண்டு கொள்வது. j (இதுதனக்கு அடி) ஸமஸ்த கல்யாணகு₃ணாத்மகத்வத்துக்கு அடி. k ஸமஸ்த கல்யாண கு₃ணாத்மகத்வஸ்ய நிமித்தம் ஈஶ்வரத்வமிதி ஸ்பு₂ரதி கிம்? இத்யத்ராஹ(உயர்வற உயர்நலம் இதி) ஸ்ரீமத்₃ராமாயணே அயோத்₄யாகாண்டே₃ ப்ரத₂மஸர்க்கே₃ — 3. "தேஷாமபி மஹாதேஜா:" இத்யாதி₃பி₄: 2. "கு₃ணைர் விருருசே ராம:" இத்யாதி₃பி₄ஶ்ச பூர்வத்ர உத்தரத்ர ச உச்ய

ஜீ—பின்னை B ஊனில் வாழுயிரிலே தன்னை அநுப₄விப்பிக்கிருன்—என்று. c வெதும்பினுல்-உஷ்ண மானுல். f (இதுக்கு அடி) அவன் பிரிந்தபோது "முடிந்துபோமித்தனை" என்றிருக்கையும், அவன் முகங்காட்டினுல் ஆற்ருமை தெரியாமையுமாகிற இதுக்கு அடி என்றபடி. g கீழ்வாக்ய விவரணம் (பிரிந்தபோது இத்யாதி₃).

h இதுக்கு அடி - இந்த வைலக்ஷண்யத்துக்கு அடி. i வைலக்ஷண்யத்துக்கு அடி கு₃ணங்கள் என்றது-2. "கு₃ணைர் விருருசே ராமோ தீ₃ப்தஸ் ஸூர்ய இவாம்ஶுபி₄:" என்றத்தைப்பற்ற. j (இது தனக்கு அடி) ஸமஸ்தகல்யாணகு₃ணாத்மகத்வத்துக்கு அடி. k ஸமஸ்தகல்யாணகு₃ணாத்மகத்வத்துக்கு அடி ஸர்வேஶ்வரத்வம் என்று தோற்றுமோ? என்ன (உயர்வற இத்யாதி₃) 2. "கு₃ணைர் விருருசே ராம:" இத்யாதி₃களாலே பெருமாள்கு₃ணங்களைச் சொல்லிக்கொடுவந்து, கீழ்ச்சொன்ன

A 1-1-1. B 2-3.

சீ—அமரர்களதிபதி'' என்றிறே தோற்றுவது; ஆக, இங்ஙனே ப்ராஸங்கி₃கமாக ப்ரஸ்துதமான l ஈஶ்வரத்வத்தை அநுஸந்தி₄த்து, m அத்தை அருளிச்செய்கிறுர்.

n ''கீழே A 'மூவாமுதல்வா' என்று காரணத்வம் ப்ரஸ்துதமாகையாலே, அந்தக் காரணத்வத்தை உபபாதி₃க்கிறுர் '' என்று பணிக்கும் பிள்ளான். 'முதல் திருவாய்மொழியிலும் சொல்லிற்றில்லையோ ஈஶ்வரத்வம் ?' என்னில் ; o ''ஒருகால் சொன்னேம்'' என்று கைவாங்கியிருக்க வல்லரல்லர் இவர். p ஒருகால் சொல்லிற்று

அ—மாநாநாம் கு₃ணநாம் ஹேத்வாகாங்க்ஷாயாம் 1. ''ஸ ஹி தே₃வைருதீ₃ர்ணஸ்ய ராவணஸ்ய வதா₄ர்த்தி₂பி₄: । அர்த்தி₂தோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணுஸ் ஸநாதந: ॥'' இதி ஈஶ்வரத்வமேவ ஹி நிமித்தத்வேந உக்தம். l.m (ஈஶ்வரத்வத்தை அநுஸந்தி₄த்து) என்ற அநந்தரம், தாம் ஸம்ஸாரிகளுடைய அநர்த்த₂ங்கண்டு பொறுக்கமாட்டாத ப்ரக்ருதியாகையாலே, தே₃வதாந்தரங்களில் பரத்வபு₃த்₃தி₄பண்ணி அநர்த்த₂ப்படுகிற ஸம்ஸாரிகளைக்கண்டு, அத்தை நிவர்த்திப்பிக்கைக்காக ''ப₄க₃வத்பரத்வத்தை உபதே₃ஶிப்போம்'' என்று பார்த்து (அத்தை அருளிச்செய்கிறுர்) என்று கூட்டி நிர்வஹிப்பது.

n ஸாக்ஷாத்ஸங்க₃தி (கீழே மூவா முதல்வா என்று தொடங்கி) o.q (ஒருகால் சொன்னேம் என்று) இத்யாதி₃வாக்யாநந்தரம், (இனித்தான் ப₄க₃வத்₃விஷயத்தில்) இத்யாதி₃வாக்யம் அநுஸந்தி₄ப்பது. q.p ''இனித்தான்'' என்றதின் விவரணம் (ஒருகால் சொல்லிற்றென்று இத்யாதி₃) q (ப₄க₃வத் விஷயத்தில் புநருக்தி தோ₃ஷாயவாகாது) என்கிறவிடத்திலே, 2. ''ப்ரஶம்ஸாயாம் ப்ரதிஜ்ஞாயாம் ப்ரலாபே தர்ஜநேऽபி வா । ப₄யே ச விஸ்மயே சைவ பௌந:புந்யமலங்க்ருதி: ॥'' என்றதில் ப₄க₃வத்பரத்வ ப்ரதிஜ்ஞையாகையாலே தோ₃ஷமில்லை என்றபடி. o p.r.s ''ஒருகால் சொன்னேம்'' இத்யாதி₃வாக்யத்₃வயவிவரணம் (ஒரு கு₃ணத்தை இத்யாதி₃ வாக்யத்₃வயம்) o...s யத்₃வா, உபதே₃ஷ்ட்ரு ஸ்வபா₄வத்தாலும், உபதே₃ஶ்ய ஸ்வபா₄வத்தாலும், அநுபா₄வ்ய ஸ்வபா₄வத்தாலும், அநுப₄வித்ரு ஸ்வபா₄வத்தாலும், அநுபா₄வயித்ரு ஸ்வபா₄வத்தாலும் புநருக்தி தோ₃ஷாயவன்று என்கிறுர் (ஒருகால் சொன்னேம் என்று தொடங்கி) சேதநருடைய து₃ர்க்க₃தியைக்கண்டு, ''ஒருகால் ப₂லியாவிடில் இனி ஒருகாலாகிலும் ப₂லிக்கிறது''

ஜீ—கு₃ணங்களுக்கு ஹேதுவாக, 1.''ஸ ஹி தே வைருதீ₃ர்ணஸ்ய'' இத்யாதி₃யாலே ஈஶ்வரத்வம் சொல்லிற்றிறே — என்று அருளிச்செய்வர். l.m (ஈஶ்வரத்வத்தை அநுஸந்தி₄த்து) என்ற அநந்தரம் - பராநர்த்த₂ஸஹிஷ்ணுவாகையாலே, ''தே₃வதாந்தரபரத்வ பு₃த்₃தி₄யாலே அநர்த்த₂ப்படுகிற ஸம்ஸாரிகளுக்கு அத்தை நிவர்த்திப்பிக்கைக்காக ப₄க₃வத்பரத்வத்தை உபதே₃ஶிப்போம்'' என்று பார்த்து (அத்தை அருளிச்செய்கிறுர்) என்று சில கூட்டி நிர்வஹிப்பது.

